விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM

நாதம் 01 | சுக்கில ஞூ சித்திரை மீ 25-ம் உ | சனிக்கிழமை | (07 - 04 - 1990) | ஹிஜ்ரி 1410 | றம்ழான் 10 | ஓசை 48

## ராஜீவைத் தாக்கியவன் விடுதலையால் தமிழக சட்டசபையில் குழப்பம்


(சென்னை)

கொழும்பில் வைத்து முன்னாள் பிரதமர் ராஜீவைத் தாக்கிய இலங்கை கடற்படை வீரர் றோகன டீ சில்வா விடுதலை குறித்து தமிழக சட்டப்பேரவையில் ஒழுங்குப் பிரச்சினை எழுப்ப முயன்றபோது தி.மு.க. உறுப்பினர்களுக்கும் அ. தி. மு. க. இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்களுக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டது.

இதற்குப் பேச சபாநாயகர் அனுமதியளிக்க மறுத்ததையடுத்து எதிர்க்கட்சி உறுபபினர்கள் சபையை விட்டு வெளியேறினார்கள்.

சட்டசபைக்கு வெளியில் செய்தியாளரிடம் பேசிய இந்திரா காங்கிரஸ் துணைத் தலைவர் திரு. குமரி அனந்தன் தாம் வெளிநடப்புச் செய்ததன் காரணத்தை தெரிவித் னர்.

# பிரேமா - பிரபா சந்திப்பு விரைவில்; பகிரங்கமாக நடக்கும்; அந்தரங்கமல்ல!



## பாராளுமன்றில் ரஞ்சன் அறிவிப்பு

(கொழும்பு)

தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனும் இலங்கை ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவும் விரைவில் சந்தித்துப் பேசுவார்கள்: அந்தச் சந்திப்பு இரகசியமாகவோ அந்தரங்கமாகவோ, ஒதுக்குபுறத்திலோ நடைபெறாமல் பகிரங்கமாகவே நடைபெறும் சந்திப்பு பற்றிய நேரமோ திகதியோ இப்போது சொல்லமுடியாது

இவ்வாறு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரும், பெருந்தோட்டத் தொழில் அமைச்சருமான ரஞ்சன் விஜேரத்னா நேற்றுப்பாராளு மன்றத்தில் அறிவித்தார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய கூட்டத்தில் சபையின் ஒத்திவைப்புப் பிரேரணை மீது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த கேகாலை எம். பியும் மற்றும் எதிர்க் கட்சி எம். பிக்களும், பிரேமதாஸாவும் பிரபாகரனும் விரைவில் சந்தித்துப் பேச விருப்பதாகச் செய்தி வெளி வந்திருக்கிறது. உண்மை தானா? என்று கேள்வியைக் கிளப்பினர். இச்சந்திப்பு எங்கே? எப்போது நடைபெறுமென்றும், பகிரங்கமாகவா; அந்தரங்கமாகவா நடைபெறுமென்றும் அவர்கள் கேள்வியை எழுப்பினர்.

அதற்கு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா பதிலளிக்கையில், ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவும் விடுதலைப் புலிகள் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனும், விரைவில் சந்தித்துப் பேசுவார்கள் இது இரகசியப் பேச்சுவார்த்தையாக இருக்காது பகிரங்கமாகவே இருக்கும். இதில் ஒளிவு மறைவு எதுவும் இல்லை நேரம் தேதி பற்றி இப்போது எதுவும் சொல்ல முடியாது என்று கூறினார்.

### 'ஈழநாதம்' வெளியிட்ட செய்தி

தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனைச் சந்திப்பதற்கு



ஜனாதிபதி பிரேமதாஸா ஆர்வம் என்ற தலைப்பில் கடந்த மூன்றாம் தேதி செவ்வாய்க்கிழமை ஈழநாதம் தலைப்புச் செய்தி வெளியிட்டு இருந்தது தெரிந்ததே.

## 30பழுதடைந்த பஸ்கள் மீண்டும் சேவையில் ஈடுபட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய போக்குவரத்துச் சபையைச்சேர்ந்த முப்பது கழித்து விடப்பட்ட பஸ்கள் சேவையில் ஈடுபட்டுள்ளதாக போக்குவரத்துச் சபைத்தலைவர் தெரிவிக்கிறார்.

மேலும் அவர் கூறுகையில் அவசரமாக தமக்கு நூறுபஸ்கள் தேவையாக இருப்பதாகவும் 260 பஸ்கள் ஓடவேண்டிய

(6ஆம் பக்கம் பார்க்க)

## தலைவர் படம் மாறியதால் வேலைக்கு ஆபத்து!

(கொழும்பு)

ரூபவாஹினி செய்திப் பிரிவைச் சேர்ந்த இரண்டு ஊழியர்கள் வேலையில் இருந்து இடை நிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் ஒருவர் தமிழராவார்.

சில தினங்களுக்கு முன்னர் ஒளிபரப்பான தமிழ், சிங்கள செய்திகளில் உலகத் தலைவர் ஒருவரின் படத்திற்குப் பதிலாக வேறு ஒரு உலகத் தலைவரின் படத்தை ஒளிபரப்பின் போது போடப்பட்டதற்காகவே இவர்கள் இருவரும் இடை நிறுத்தப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக மேலும் விசாரணைகள் நடைபெறுகிறது.

## ஒரே நாளில் ஆறு விபத்துக்கள்

(யாழ்ப்பாணம்)

நேற்று வடமாகாணத்தில் நேற்று மட்டும் ஆறு மோட்டார் சைக்கிள் விபத்து நடந்துள்ளது.

(6ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். மாவட்ட உ. அ. அ. பிரிவுகளில் காணிக் கச்சேரிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் தேசிய காணி உபயோகம் பகிர்வு ஆகியவை பற்றிய காணிக் கச்சேரிகள் நடைபெற உள்ளன, காணி கோரி விண்ணப்பித்தவர்கள் கீழ்க் குறிப்பிட்ட திகதிகளில் தேசிய அடையாள அட்டை, ஜனசக்தி உருத்தாவணம் உணவு முத்திரை ஆகியவற்றுடன் பின்வரும் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் அந்தந்தப்பகுதி மக்கள் அழைக்கப்படுகின்றனர்.

சாவகச்சேரி 11ஆம் திகதி காலை ஒன்பது மணி தொடக்கம் தென்மராட்சி மத்தி,

(6ஆம் பக்கம் பார்க்க)

## பழைய ஷெல் வெடித்து காங்கேசனில் இருவர் பலி!

## மகேந்திரராசா - பிரேமதாசா சந்திப்பு இன்று இல்லை

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கும், அரசாங்கத்துக்குமிடையில் ... யில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் கோ. மகேந்திரராசா, செய

## யாழ். மாவட்டத்தில்

# கச்சேரிகளில் மேலதிக ஊழியர்கள் உ. அ. பி. ஊழியர் பற்றாக்குறை

(யாழ்ப்பானிம்)

யாழ்ப்பாணச் செயலகத்தில் வெற்றிடங்கள் இருப்பதற்குப் பதிலாக, மேலதிக உத்தியோகஸ்தர்கள் கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

செயலக நிர்வாக உத்தியோகஸ்தர்கள் இருவர் இருக்க வேண்டிய இடத்தில் நால்வர் கடமையில் ஈடுபட்டுள்ளனர். குடாநாட்டில் உள்ள 14 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கும், யாழ். செயலகத்துக்குமாக 13 நிர்வாக உத்தியோகஸ்தர்கள் தேவை. ஆனால் செயலகத்தில் மேலதிகமாக இரண்டு உத்தியோகஸ்தர்கள் கடமையில் ஈடுபட்டுள்ளதால், போதிய உத்தியோகஸ்தர்கள் இருந்தும், இரண்டு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் நிர்வாக அத்

(6ஆம் பக்கம் பார்க்க)

## கடற்படை வீரர் விடுதலை தமிழ்நாடு காங்கிரஸ் கண்டனம்

(சென்னை)

1987 ஜூலையில் கொழும்பில் வைத்து முன்னாள் இந்திய பிரதமர் ராஜீவ் காந்தியை கொலை செய்ய முயன்றதற்காக சிறைவைக்கப்பட்ட கடற்படை வீரரை இலங்கை அரசு விடுதலை செய்ததை தமிழ் நாடு இந்திரா காங்கிரஸ் கட்சியினர் கண்டித்துள்ளனர்.

இது தொடர்பாக சென்னையிலுள்ள இலங்கைத் தூதரகத்திடம் தமது ஆட்சேப அறிக்கையை கையளித்தனர்.

சிறைக்காலம் முடியும் முன்னரே இவரை விடுதலை செய்தது இந்தியாவை அவமதிக்கும் செயல் எனவும் இவர்கள் தெரிவித்தனர்.

## யாழ் - கல்முனை பஸ் சேவை; யாழ் டிப்போ உதவ வேண்டும்

(அம்பாறை)

மட்டக்களப்பு - யாழ்ப்பாணம் பஸ் சேவையைப்போல கல்முனை யாழ்ப்பாணம் பஸ் சேவையை ஆரம்பிக்குமாறு இப்பகுதி மக்கள் அதிகாரிகளைக் கோரியுள்ளனர்.

தற்போது கல்முனையிலிருந்து யாழ்ப்பாணம் வரும் பயணிகள் ஒரு நாள் முன்னதாகவே மட்டக்களப்பு வந்து தங்கி அலையவேண்டியுள்ளது

இதேபோல யாழ்ப்பாணத்திலிருந்து கல்முனைக்கு வருபவர்களும் மாலை நேரமானதால் மட்டக்களப்பில் தங்கியே கல்முனைக்குச் செல்ல வேண்டும்.

இது தொடர்பாக போக்கு

(6ஆம் பக்கம் பார்க்க)

## இரவு யாழ் - கொழும்பு ரயிலில் பெண்ணிடம் நகை திருடமுயற்சி

(கொழும்பு)

ரயில் சங்கிலியை இழுத்து விட்டுத் தாலியை அறுத்து ஓட முயன்றவர் அதில் தோல்வி அடைந்த சம்பவம் நேற்று முன்தினம் கொழும்பிலிருந்து யாழ். வந்த இரவு ரயிலில் இடம்பெற்றது.

வெயாங்கொடைக்கு அண்மையில் ரயில் வந்துகொண்டிருந்தபோது பிரஸ்தாப நபர் அதில் பிரயாணம் செய்து கொண்டிருந்த பெண்மணியின் கழுத்தில் கையை வைத்தாராம். அவ்வேளை ரயிலும் தன் வேகத்தைக் குறைத்துக் கொண்டிருந்ததாம்.

(6ஆம் பக்கம் பார்க்க)

## தாயார் அனுமதி கேட்கிறார்!

(கொழும்பு)

தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ள ஜே. வி. பி. இயக்கத் தலைவர் றோகண விஜயவீராவின் மனைவியையும், பிள்ளைகளையும் பார்வையிட அனுமதி தருமாறு அவரது தாயார். அமைச்சர் ரஞ்சன் விஜயரத்தினாவிடம் கேட்டுள்ளார்.

## நிறை குறைவு விலை அதிகம்!

(யாழ்ப்பாணம்)

பாணின் விலை 80 சதமாக அதிகரிக்கப்பட்டு 4-90 க்கு விற்கப்படுகிறது. ஆனால் நிறை குறைந்த பாணையே கடைகளில் தொடர்ந்து விற்கப்படுவதாகப் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

சில கடைகளில் வெவ்வேறு வகைவான பாண் விற்கப்படுவதாகவும். அவை முன்னூற்றைம்பது கிராம் நிறைக்குக் குறைவாகவே இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் பத்திரிகை

(6ஆம் பக்கம் பார்க்க)

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறையில் வீட்டுக்குள் கிடந்த பழைய ''ஷெல்'' ஒன்றை எடுத்து சாக்கிற்குள் போடமுற்பட்ட போது அது வெடித்து இருவர் பலியாகி உள்ளனர்.

காங்கேசன்துறை - ஐயனார் கோவிலடியைச் சேர்ந்த வோச்சர் எனப்படும் 50 வயது மதிக்கத்தக்க நபர் ஒருவரும் இதனை வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்ற 8 வயது சிறுவனும் பலியாகியுள்ளனர்.

மேலும் ஒருவர் காயமடைந்த நிலையில் யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## புதுவருட அன்று வர்த்தக வங்கி சலுகையும், பரிசும் வழங்குகிறது

(யாழ்ப்பாணம்)

வரும் புத்தாண்டு தினத்தன்று இலங்கை வர்த்தக வங்கி வாடிக்கையாளர்களுக்கு சலுகையும் பரிசும் வழங்க இருப்பதாக அறிவித்துள்ளது.

அன்றைய தினம் சேமிப்புக் கணக்கில் 500 ரூபாவுக்கு மேல் சேமிப்பு கணக்கு தொடங்குபவர்களுக்கு கைவிசேடமாக ஒரு பெறுமதி மிக்க புதிய நாணயம் வழங்கப்படவுள்ளது.

இது தவிர நிலையான வைப்பு செய்பவர்களுக்கு பத்தாயிரம் ரூபாவுக்கு மேல்

(6ஆம் பக்கம் பார்க்க)

அரசாங்கத்துக்குமிடையில் இன்று நடைபெறுவதாக இருந்த பேச்சுவார்த்தைகள் நடைபெறமாட்டாது எனத் தெரிய வருகின்றது.

இன்று நடைபெறுவதாக இருந்த இப்பேச்சுவார்த்தை

லாளர் யோகரெட்னம் யோகி,, அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் ஆகியோர் கலந்து கொள்வர் என முன்னர் எதிர்பார்க்கப்

(6ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணிக் கூட்டம்

### ஆயிரக்கணக்கில் மக்கள் கூட்டம்

(திருக்கோணமலை)

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் முதலாவது பொதுக் கூட்டம் நேற்று முன்தினம் மாலை திருக்கோணமலை பெரிய முற்றவெளி மைதானத்தில் நடைபெற்றது

இக் கூட்டத்தில் மூதூர் விடுதலைப் புலிகள் அரசியல் இணைப்பாளர் அரசன், தம்பலகாமம் அரசியல் இணைப்பாளர் ரவி, திருமலை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் ரூபன், மூதூர் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் உறுப்பினர் நைனா முகம்மது, யோகேந்திரன், அருளம்பலம்,

(6ஆம் பக்கம் பார்க்க)

## கலன் கசிப்புக்கு ஆயிரம் அபராதம்

(வேலணை)

வேலணை மேற்குப் பகுதியில், கசிப்பு விற்பனையில் ஈடுபட்டு வந்தவர்கள் விழிப்புக் குழுவினரால் கண்டுபிடிக்

(6ஆம் பக்கம் பார்க்க)

# "அன்று தேடிச் சென்றவர்கள் இன்று வேறு ராகம் பாடுகின்றனர்

## குறுகிய அரசியல் லாபந் தேடுகிறார்கள்"

### எதிர்க்கட்சிகள் பற்றி பிரேமதாசா

(கொழும்பு)

1986 இல் திரு. விஜயகுமாரணதுங்கா விடுதலைப்புலிகளைத் தேடிச் சென்றார். அவ்வாறாக தேடிச் சென்றவர்கள் இன்று பல்வேறு கேள்விகளைக் கேட்கின்றனர்.

இவ்வாறு ஜனாதிபதி ஆர். பிரேமதாஸ நேற்று ஸ்ரீகோத்தாவில் நடைபெற்ற வைபவத்தில் கூறினார். தொடர்ந்து பேசிய ஜனாதிபதி பிரேமதாசா மேலும் கூறியதாவது.

அரசியல் லாபம் தேடுவதற்கு இவ்வாறு பல கேள்விகளைக் கேட்கின்றனர். உண்மையில் அவர்களுக்கு எம்மில் நேசமில்லை அவர்கள் இரட்டை ஆற்றில் நீந்த விரும்புகிறார்கள். நாட்டில் சமாதானம் வருவதை விரும்பவில்லை தமிழ்ஈழ விடுதலைப்புலிகள் இன்று ஜனநாயக வழிக்குத் திரும்பியுள்ளது. அரசியல் கட்சியாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

கட்சி வேறுபாடுகளுக்கு பதிலாக இன்று நாட்டில் நிலச்சுவந்தர் காலத்தில் இருந்த வர்க்க பேதங்கள் தலை தூங்கத் தொடங்கியுள்ளன.

தமது குறுகிய அரசியல் நோக்கங்களை நிறைவேற்றவே அவர்கள் அரசியலை ஒருவகையில் கண்டிக்கின்றனர். ஜனநாயக முறையில் தமது நோக்கங்களை பெற முடியாததால் இவ்வாறு நடந்துகொள்கின்றனர்.

சகல சமூகத்தினரும் ஐக்கியமாகவே செயற்பட வேண்டும். மற்றும் ஒரு வெளிநாட்டு இராணுவம் இங்கு வருவதற்கு இனி இடமளிக்கக் கூடாது.

மீண்டும் கொலைகள், அகதிகள், யுத்தம் என்பன நாட்

(6ஆம் பக்கம் பார்க்க)

வரிவிளம்பரம்

விற்பனைக்கு

தனிச் சீனியில் அரைத்த ஐசிங் சுகர் எங்களிடம் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். M.G.M. 777 K.K.S. Road Jaffna. (B-507)

(டில்கா வாச் வேக்ஸ்)
யாழ் நகரில் சகலவிதமான மணிக்கூடுகளையும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள DiLKA WATCH WORKS, Opposite Bus Stand, Jaffna (குறிப்பு) சகல 'சீக்கோ' சிற்றிசன் உதிரிப்பாகங்களும் கையிருப்பில் உண்டு (B-537)

நாவலடி அரியாலையில்றோட்டுக்குஅருகாமையில் நெற்காணி 58 பரப்பு விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: பொ. கனகசபாபதிஐயர்சந்தசுவாமி கோவிலடி, பொலிகண்டி. வல்வெட்டித்துறை. (R-75)

கோழிக்குஞ்சு விநியோகம்
Prima Lochman சிவப்பு வெள்ளை பேட்டுக் குஞ்சுகள், புறொயிலர் குஞ்சுகள் கறுப்பு, சிவப்பு சேவற் குஞ்சுகள், Golden comet Hyline Black பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு செவ்வாய், புதன் கிழமைகளில் முன் கூட்டியே பதிவு செய்து பெற்றுக் கொள்ளலாம். Nallur Farm Centre 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (B -189)


## வவுனியாவில் கதம்ப விழா

(வவுனியா)

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் வவுனியா மாவட்ட கலை, கலாசார குழு நடாத்தும் தாயக இராகங்கள் என்னும் கதம்பவிழா இம்மாதம் பதினாறாம் திகதி வவுனியா மகா வித்தியாலயத்தில் நடைபெற உள்ளது.

இசைக் கச்சேரி, நாடகம், பரதநாட்டியம், வில்லிசை போன்ற நிகழ்ச்சிகள் இவ்விழாவில் இடம்பெறும். (தி)


வடபகுதிகடற்றொழிலாளர்கள் மலிவு விலையில் கீழ்க்கண்ட


## க. பொ. த. (சா.த.) பரீட்சை திருப்தியாகநடைபெறுகிறது

(கல்லாறு)

பெரிய கல்லாறு, கோட்டைக்கல்லாறு, ஒந்தாச்சிமடம், களுவாஞ்சிக்குடா கா. பொ. த. (சா.த) பரீட்சை நிலையங்களில் பரீட்சை திருப்திகரமான முறையில் நடைபெற்று வருவதாக சம்பந்தப்பட்ட பரீட்சை நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

புலிகளின் தீவிர கண்காணிப்பை அடுத்து காலையில் பரீட்சை நிலையங்களில் சமூகமளித்த சிலபரீட்சார்த்திகள் மாலையில் சமூகமளிக்கவில்லையாம் என சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன. இவர்கள் தவறான நோக்கத்தோடுபரீட்சைஎழுத வந்தவர்களாக இருக்கலாம் என கருதப்படுகிறது.

பரீட்சை முடிந்து வந்தபரீட்சார்த்திகளை வினவிய போது தங்களால் இம்முறை நிம்மதியாகப் பரீட்சை எழுத முடிந்ததாகவும், பரீட்சை நிலையங்களில் எவ்வித முறைகேடுகளும் இடம்பெறவில்லை என்றும தெரிவித்தனர். (45)


அனைவருக்கும் தமிழ் - சிங்கள
புதுவருட வாழ்த்துக்கள்
உரித்தாகுக!

லக்ஷ்மி ஸ்ரோர்ஸ்
பெரியகடை,
மன்னார்.
B 544


## அன்னை பூபதிக்கு ஆயிரமாய் ◎ அஞ்சலிகள் ◎



## அன்னை பூபதி நினைவுக் கூட்டம்

(வவுனியா)

சடந்த சனிக்கிழமை கோவில் குளம் பாடசாலையில் மட்டக்களப்பில் உண்ணாவிரதம் இருந்து உயிர் நீத்த அன்னை பூபதியின் நினைவாக கூட்டமொன்று நடைபெற்றது.

மக்களின் ஒருமித்த சக்தி மூலம் எமது போராட்டத்தை வலுப் பெற்றதாக அமைத்து, எம் இனத்தின் விடுதலை உணர்வுகளை வெளிப்படுத்தியவர் அன்னை பூபதி என்று கோவில் குளம் பகுதி விடுதலைப்புலிகள் உறுப்பினர் திரு. ராம் அங்கு பேசும் போது குறிப்பிட்டார்.

நகர, சிற்றூர் அவைத் தலைவர்கள், இணக்கசபை அமைப்பாளர்கள் ஆகியோரும் உரையாற்றினார்கள். (தி)


100வது வெற்றி தினம்!
நியூசாந்தி வெண்திரையில்
10.30, 2.30, 6.30, 9.30
'சூப்பர் ஸ்ரார்' ரஜனி 'கவர்ச்சிக்கன்னி' அமலா
ஜனகராஜ் மணிவண்ணன்
நடித்த
'பாரதிராஜாவின்'
கொடி பறக்குது
(ஈஸ்ட்மன் வண்ணம்)
(B 705)



TENDER FOR FURNITURE

Reference to the above advertisement on 30-03-90 the closing date of the Tender is extended upto 24-04-90. Last date for collection of Tender Form is extended upto 11-04-90.

Tenders will be opened at 2-30 p.m. on 24.04.90 in the Board Room of the University of Jaffna.

Registrar,
University of Jaffna,

B/704



யாழ்நகரில்
இன்றைய சினிமா

வின்சர் - யாழ்
10·30, 2.30, 6.30
சிவகுமார்-சுஜாதா நடித்த
அன்னக்கிளி
(புதியபிரதி)

100 வது நாளாக!!
நியூ சாந்தி (யாழ்)
தினசரி 10.30, 2.30, 6.30
சூப்பர் ஸ்ரார்'
ரஜனி - அமலா நடித்த
கொடி பறக்குது
(கலர்)

7 வது வாரம்
மனோகரா - (யாழ்)
தினசரி 10.30, 2.30, 6.30
ரஜனி, ரூபினி. நடித்த
மனிதன்
(கலர்)

ராஜா (யாழ்)
10. 30, 2. 30, 6. 30
ரஜனி (இரு வேடம்)
ராதா, நதியா
102 நாள் வெற்றிநடை போடுகிறது
ராஜாதி ராஜா
(கலர்)


## விண்ணுலக வாழ்வில் 200 நாட்கள்......



குருதியாற்றில் குளித்த ஆண்டில்
துப்பாக்கி வேட்டுகளினூடு
மனித உடல்களுடன்
மனித மனங்களும்
வெந்த ஆண்டில் - உன்
புனித உயிர் பறந்ததடா - உன்
இறுதி மனப் போராட்டத்தில்
உன்னை போன்ற எத்தனை வீரர்களுக்கு
மரண மாலைகள் காத்து நின்றனவடா
வறுமையின் வெறுமையைக் கண்டு
வாழ்க்கைப் பாதையை முன்னெடுத்தாய்
உழைப்பை பிழிந்தெடுத்தும்
உண்ண உணவின்றி வாழும்
ஏழைத் தோழர்களை அரவணைத்தாயடா
நாளை வரும் மறுநாளை வருமென
வேளைகளை இழந்திடாமல் - நீ
நாள் முழுவதும் வீரனாக வாழ்ந்து மடிந்தாயடா
நீ நேசித்த சுதந்திரக் காற்றை
சுவாசிப்பதற்கு மணல் பரப்புகளில் - எமது
கால்கள் நகருகின்றன - சில உயிர்களோ
தணல்களின் மீது வாழ்கின்றனவடா
இலட்சிய வீரர்களுக்கு சிறைக்கூடங்கள் கூட
போராட்டப் பாசறைகள் - அதே போல்
தெய்வீக குறிக் கோள்களை உடையவர்களுக்கு
வானகம் கூட வாசல் தலங்களடா - நீ
மரண உலகிற்கு மாலையிட்டாய்

விலையில் கீழ்க்கண்ட
பொருள்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
1 1/2 மி. மீ., 2.மி.மீ, நைலோன், கொர்லோன் நூல் வகைகளை சகாய விலையில் பெற்றுக்கொள்ள நீங்கள் நாட வேண்டிய இடம்.

**சென், அன்ரனீஸ்**

40, கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.

(B/290)



தாயே !
தாயகத்தின்
தாயான மூத்தவளே...
யாகம் நடத்தியொரு
தியாகத் தீ வளர்த்தவளே...
ஓயோம் ... ஒரு பொழுதும்
உன் கனவு நனவாகும்
தூயோய் நின் நாமம்
சுடராய் வழி காட்டும்

**VIMALAS**

*9 - 15, MODERN MARKET,*
*CHAVAKACHCHERI.*

(B/518)




**திரு - நமசிவாயம்**
**தெய்வேந்திரன் (நாதன்)**

பிறப்பு :
**15 – 9 – 58**

இறப்பு :
**22 – 9 – 89**

மரண உலகிற்கு மாலையிட்டாய்
எல்லோரினது மனவாசல்களிலும்
பூத்துக் கொண்டு இரகசியமாய் நீ
மட்டும் உதிர்ந்து விட்டாய்
நீ பௌர்ணமியைப் போலவே
முழு நிலவாய் முளைத்திருப்பாய்
மௌனத்தே போனதால்
மாலைகளுக்கும் காலை களுக்கும்
கால்கள் முடமானது
இளமை எழுதும் வசந்த
வாசகங்களை எழுத்துக் கூட்டுமுன்
காலம் எழுதிய கடைசிவரியை
நேசித்துக் கொண்டாயே!

**- நண்பர்கள்**

(R/86)


## வாடிக்கையாளர்களுக்கு ஓர் வரப்பிரசாதம்!

## பின்வரும் தேவைகளுக்கு எம்மை நாடுங்கள்

- தரமான அரிசி வகைகள்
- சகலவிதமான நுகர்ச்சிப் பொருட்கள்
- விவசாய தேவைக்கான பசளை கிருமிநாசினி வகைகள்
- கட்டிடம் சம்பந்தமான சீமேந்து, கம்பி, எஸ்லோன் பைப்புகள்.
- பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் எரிபொருள் வகைகள்

அரசாங்க கட்டிட ஒப்பந்தங்கள் சிறந்த முறையில்
விரைவாகவும் திருப்திகரமாகவும் நிறைவேற்றி கொடுக்கப்படும்.

# கரைச்சி வடக்கு ப. நோ. கூ. சங்கம்

பரந்தன்.

(R/84)

# சோவியத்-அமெரிக்க ஜனாதிபதிகள் ஜூன் மாதம் சந்தித்து பேசுவார்கள்

(வாஷிங்டன்)

எதிர்வரும் ஜூன் மாதம் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷுக்கும். சோவியத் ஜனாதிபதி மிகாயல் கொர்பசேவுக்கும் இடையில் உத்தியோக பூர்வமான பேச்சுக்கள் நடைபெறவுள்ளன.

இரு தலைவர்களுக்கும் இடையிலான பேச்சுக்களுக்கு முன்னோடியாக இருநாட்டு வெளியுறவு அமைச்சர்களும் வாஷிங்டனில் சந்தித்துப் பேச்சு நடாத்தியுள்ளனர்.

முக்கியமாக சோவியத்-லித்வேனியா பிரச்சினைகள் பற்றி அமெரிக்க வெளியுறவு அமைச்சர் விபரமாக தமது நிலைப்பாட்டை சோவியத் வெளியுறவு அமைச்சருக்கு எடுத்துக் கூறினார். இதனால் இந்தப் பேச்சுக்களில் சிறிது தடங்கல் ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

அணுவாயுத உற்பத்திக் குறைப்புபற்றி இரு தலைவர்களும் பேசுவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. நான்கு நாட்களுக்கு இந்தப் பேச்சு வார்த்தைகள் நடைபெறும்

சோவியத்-அமெரிக்க வர்த்தக உடன்பாடுகள் குறித்தும் இங்கு ஆராயப்பட்டன.

அமெரிக்க ஜனாதிபதிக்கு சோவியத் தலைவர் எழுதிய கடிதத்தை சோவியத் வெளியுறவு அமைச்சர் எட்வர்ட் செவர்தநாட்சே அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜேம்ஸ் பேகரிடம் கையளித்தார்.

## நேபாளத்தில் வேலைநிறுத்தம் ஆர்ப்பாட்டக்காரரும் பொலிஸாரும் மோதினர்

(காத்மண்டு)

நேபாளத்தில் சர்வகட்சி ஜனநாயக முறையை ஏற்படுத்த வேண்டும் எனக்கோரி நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தினால் பொலிஸாரும் ஆர்ப்பாட்டக்காரரும் மோதினார்கள். சிலர் காயமடைந்ததாக அறிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் இங்கு இரண்டு மணிநேரம் வேலை நிறுத்தம் நடைபெற்றதால் வங்கிகள், போக்குவரத்துக்கள் விமானச்சேவைகள் ஸ்தம்பிதமடைந்தன.

அரசாங்கம் விதித்த கட்டுப்பாடுகள் தடைகளை மீறியே இந்த வேலை நிறுத்தம் நடைபெற்றன.

விமான நிலைய அலுவலகத்தினுள் புகுந்த பொலிஸார் அவர்களை வேலைக்கு செல்லவேண்டும் எனக்கட்டாயப் படுத்தியும் பயன் கிடைக்கவில்லை.

## தென்னாபிரிக்க கைதிகளை விடுதலை செய்ய வேண்டும் அமெரிக்க ஜனாதிபதி அறிவிப்பு

(நியுயோர்க்)

தென்னாபிரிக்கா அரசு அவசரகாலச்சட்ட விதிகளை நீக்கியும், சிறைகளில் தடுப்புக்காவல்களில் உள்ளவர்களை விடுதலை செய்ய வேண்டும் என அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்காவில் தற்போதுநிலைமையில்முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதால் தென்னாபிரிக்கா அரசு அதன் சில நடவடிக்கைகளை நீக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

விடுதலையான நெல்சன் மண்டேலாவுக்கும் தென்னாபிரிக்க அரசுக்கும் இடையில் பேச்சுக்கள் நடைபெற்றது. அங்கே அமைதியான நிலமை ஏற்பட வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## காத்தான்குடிப் பிரதேசம் வழமைக்குத்திரும்பியது

(காத்தான்குடி)

கடந்த பல ஆண்டுகளுக்கு முன்பிருந்த சுறுசுறுப்பான நிலைமையில் காத்தான்குடிப் பிரதேசம் தற்போது காணப்படுகிறது.

கடைகள் பெரும்பாலும் இரவு 9 மணிவரை திறந்திருக்கின்றன. தேநீர்ச்சாலைகள் இரவு 9 மணிவரை திறந்திரு

ரம்ழான் மாத விஷேட தொழுகைகளும், பயான் நிகழ்ச்சிகளும் முன்காலங்களைப்போல்எத்தகையபீதியும் அச்சமும் இன்றி பள்ளிவாசல்களில் நடைபெற்று வருவதும் குறிப்பிடத்தக்கது.

## உங்களை பங்காளிகளாக்குவது எங்கள் பணியாகும்

(சுதுமலை)

-ஆஞ்சநேயர்

''விடுதலைப் புலிகள்மக்கள் முன்னணியின் மூல அமைப்பே சிற்றூர்அவை. ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவுகளுக்கும் தனித் தனியான 20 அங்கத்தவர்களைக் கொண்ட சிற்றூர் அவை அமைக்கப்படும். சாதி, சமய, பொருளாதார, ஏற்றத்தாழ்வுகளுக்கு இடமளிக்காமல் 18 வயதுக்கு மேற்பட்ட சகல ஆண் பெண் இருபாலாரும் இவ் அவையில் பங்கு கொண்டு பார்வையாளர்களாக இருக்கும் மக்களை பங்காளிகளாக்கி, சர்வதேச ரீதியில் அங்கீகாரத்தைப் பெற்று, உலகிலே சட்டரீதியான பிரதிநிதித்துவத்தை வெளிப்படுத்தி ஒரு பரிபூரண அமைப்பாக எமது விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி திகழ அனைவரும் பாடுபடவேண்டும்''

இவ்வாறு மானிப்பாய் இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற சிற்றூரவை அங்குரார்ப்பண கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய வலிகாமம் அரசியல் பொறுப்பாளர் திரு. ஆஞ்சநேயர் குறிப்பிட்டார்.

தமிழ் ஈழவிடுதலைப்புலிகளின் மானிப்பாய் பிரதேச அரசியல் பொறுப்பாளர் திரு. சங்கர் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட 13 கிராமசேவையாளர் பிரிவுகளுக்குமான பதின்மூன்று சிற்றூரவைகளும் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. அத்துடன் ஒவ்வொரு சிற்றூரவைக்கும் தனித்தனியான ஏழு செயற் குழு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டார்கள். மொத்தம் 260 அங்கத்தவர்கள் கலந்து கொண்ட இக்கூட்டத்தில் அங்கத்தவர்களின் செயல்பாடுகள் குறித்து போதிய விளக்கமளிக்கப்பட்டது. ஒவ்வொரு அங்கத்தவர்களுக்கும் தனித் தனியான ''ஒழுக்கக்கோவைகள்'' வைக்கப்பட்டு அவர்களின் நடத்தைகள் கண்காணிக்கப்படும் என்றும் அங்கு அறிவிக்கப்பட்டது. (19)

## பெருமளவு ஆயுதங்கள் மூதூர்ப்பகுதியில் கண்டுபிடிப்பு

(மூதூர்)

மூதூர்ப் பகுதியிலுள்ள உப்புவெளி, சூடைக்குடா இளங்கந்தைக் கடற்கரைப் பகுதிகளிலும், மொட்டை மலை, கரடி மலை, என்னும் சிறு குன்றுப் பகுதிகளிலும் இருந்து புதைத்து வைக்கப்பட்ட பெருமளவு ஆயுதங்களை விடுதலைப் புலிகள்

பொறுப்பாளர் றொபினின் தலைமையின் கீழ் விடுதலைப் புலிகளின் போராளிகள் சிலரின் முயற்சியினாலேயே இவ் ஆயுதங்கள் கைப்பற்றப் பட்டன.

இப்பகுதிகளில் மேலும் ஆயுதங்கள் இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது விடு

## காஷ்மீர் பிரச்சினையில் பாகிஸ்தான் தலையிடுகிறது பிரிட்டனில் இந்திய ஜனாதிபதி

(லண்டன்)

காஷ்மீரில் இடம் பெறும் கலவரங்களுக்கு பாகிஸ்தானே முக்கிய காரணம் என்று இந்திய ஜனாதிபதி ஆர்.வெங்கட்ராமன் லண்டனில் தெரிவித்தார்

தற்போது பிரிட்டனுக்குவந்துள்ள அவர் பிரிட்டிஸ் பிரதமர் மாகிரட் தாட்சருடன் பேச்சுக்கள் நடாத்தினார். இதில் இந்தியாவின் தற்போதைய நிலைகள் குறித்து இருவரும் பேசினார்கள்.

காஷ்மீர் தீவிரவதிகளுக்கு பாகிஸ்தான் பயிற்சி அளித்து வருவதாக அவர் இந்தப் பேச்சுகளில் எடுத்துக் கூறியிருப்பதுடன் பாகிஸ்தான் சிம்லா உடன்படிக்கையின் படிநடந்து கொள்ளவேண்டும்என்றுஉலக நாடுகள் அதற்கு தெரிவிக்க வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

காஷ்மீர் பிரச்சினைக்கு மக்களின் கருத்துக்கணிப்புநடாத்தும் திட்டம் இந்தியாவுக்கு இல்லை எனவும அவர் கூறினார். தீவிரவாத நடவடிக்கைகளில் ஈடுபடுவோரை நாடுகடத்துவது குறித்தும்இருதலைவர்களும் பேசியுள்ளனர்.

## புதிய பாடசாலை திறப்பு விழா

(வவுனியா)

கல்வி வளர்ச்சியில் பின் தங்கியுள்ள வவுனியா மாவட்டம் எமது பிரதிக் கல்விப் பணிப்பாளரினால் முன்னேற்றம் அடைந்து வருவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை வவுனியா மாவட்டத்தில் உள்ள சமயபுரம், பாரதிபுரம் போன்ற கிராமங்களில் புதிய பாடசாலைத் திறப்பு விழா நடைபெற்றது.

அவ்விழாவில் கலந்து கொண்டு பேசும் போது வவுனியா மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜத்தலைவர் திரு.வீரசிங்கம் மேற்படி தெரிவித்தார்.

கல்வித் திணைக்களத்தின் திட்டமிட்ட கொள்கையினால் எமது பகுதியில் கல்வி வளர்ச்சி மேன்மையடைவது உறுதி என்று அவர் அங்கு தெரிவித்தார். (தி)

## வங்கிக் கிளைகள் இடம் மாறும்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை இலங்கை வங்கிக் கிளையும் பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கிக் கிளையும் வெகு விரைவில் பருத்தித்துறை நகருக்கு மாற்றப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விரு வங்கிகளும் தற்போது புலோலியில் மந்திகை அரசினர் ஆதார வைத்திய சாலைக்கு அருகாமையில் இயங்கி வருகின்றன. (25)

## மட்டக்களப்பு மாவட்டத்தில் நூலகர்களுக்கு கருத்தரங்கு

• (மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட பொது நூல் நிலைய நூலகர்களுக்கான இருநாள் பயிற்சி கருத்தரங்கு அண்மையில் மட்டக்களப்பு பொது நூல் நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.

பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. கா. நடராசா தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தை பிரதி கல்வி பணிப்பாளர் திரு. கு சோமசுந்தரம் பிரதம அதிதியாக கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்தார்.

சிறப்பு விருந்தினராக நீர்ப்பாசன உதவி பணிப்பாளர் திரு. கே. கார்த்திகேசு ஆகியோர் கலந்து கொண்டனர்.

2 ஆம் நாள் நிகழ்ச்சியில் பிரதம அதிதியாக மேலதிக அரச அதிபர் திரு. ஆர். தியாகலிங்கம் கலந்து கொண்டார்.

பயிற்சியின் பின்பு சான்றிதழ் வழங்கப்பட்டது. (37)

## மட்டுமாவட்டத்தில் அன்னை நினைவு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் அன்னை பூபதி நினைவு தொடர்பான வைபவங்களில் அரச திணைக்களம், கூட்டுத்தாபனம், வங்கிகளின் ஊழியர்களும் கலந்து கொள்வதாக அன்னையர் முன்னணி பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

மேற்படி அலுவலக வாசல்களில் அன்னை பூபதிக்கு அஞ்சலி செலுத்தும் பதாதைகள் காணப்படுகின்றன. சுற்றாடல்களில் கறுப்பு, வெள்ளை கொடிகள் காணப்படுகின்றன.

மாநகரசபையால் அன்னை பூபதியின் உருவப்படம் வைக்கப்பட்டு தினமும் அஞ்சலி செய்யப்படுகின்றன. கடந்த சனிக்கிழமை மாநகரசபை ஊழியர்கள் அன்னை நினைவாக மரம்நடுதல், நகர் அழகுபடுத்தல் பணியில் ஈடுபட்டனர். இன்று 7 ஆம் திகதி மாமாங்கப்பிள்ளையார்ஆலய முன்றலில் ஒரு நாள் அடையாள உண்ணாவிரதம் இருக்க தீர்மானித்துள்ளனர்.

கல்லடி, நாவலடி, மஞ்சந்தொடுவாய், ஆரையம்பதி, வந்தாறுமூலை, ஏறாவூர், களுவாஞ்சிக்குடி, கல்லாறு, தேற்றாத்தீவு, கிரான் ... லாந்துறை, வெல்லாவெளி, துறைநீலாவனை உட்பட 15 கிராமங்களில் அடையாள உண்ணா விரதங்கள் நடைபெற்றன.

இவ் வைபவங்களில் விடுதலைப்புலிகள்மக்கள் முன்னணி பிரதி தலைவர் எஸ். கரிகாலன், மாவட்ட அமைப்பாளர் விசு, மாணவர் அமைப்பு அமைப்பாளர் சுரேன், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி பிரமுகர் மாஸ்டர் திரு. வே. தம்பிராசா கலந்து கொண்டு வருகிறார்கள்.

தேசிய கடதாசி கூட்டுத்தாபனத்திலும் அன்னை பூபதி நினைவு அஞ்சலி கூட்டம் நடை பெற்றது. (37)

## வவுனியாவில் இணக்க சபைகள்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் இணக்க சபை நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டு அது தற்போது இயங்க ஆரம்பித்துள்ளது.

அந்தந்த கிராம மக்களால்

## புத்தாண்டில்

கின்றன. தேநீர்ச்சாலைகள் இரவு 9 மணிவரை திறந்திருந்து கலகலப்பாக சேவையாற்றுகின்றன.

அரசாங்கப்பணிகளும் தங்கு தடையின்றி நடைபெறுவதால் மக்கள் எத்தகைய அச்சமும் பீதியுமற்றவர்களாக தமது நாளாந்த நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர்.

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி காத்தான்குடி காரியாலயத்தில் தமது ஜனநாயக ரீதியான நடவடிக்கைகளை ஆரம்பித்ததையடுத்தே இந்நிலை பல ஆண்டுகளுக்குப் பின்னர் மீண்டும் ஏற்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் ஜனநாயகரீதியிலும் புதல் நடவடிக்கையில் திருப்தி கண்டுள்ள இப்பிரதேச முஸ்லிம் மக்கள், இங்குள்ள 18 கிராமசேவகர்கள் பிரிவிலும் கிளைகளை அங்குரார்ப்பணம் செய்யும் நடவடிக்கைகளில் ஆர்வத்துடன் செயற்பட்டு வருகின்றனர்.

புத்தாண்டில்

## சகல பாதைகளிலும் தனியார் பஸ்

(கொழும்பு)

சிங்கள - தமிழ் புத்தாண்டை முன்னிட்டு இலங்கையில் சகல பாதைகளிலும் தனியார் பஸ்களைச் செலுத்துவதற்கு அரசாங்கத்தால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இச் சலுகை நேற்று முதல் 20 ஆம் திகதி வரை அமுலில் இருக்கும். இதற்கு வழி அனுமதிப் பத்திரம் தேவையில்லை.

யாழ்- கச்சேரி மூலம்

## 1010 அனுமதிப் பத்திரங்கள் இதுவரை வழங்கப்பட்டுள்ளன

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து மார்ச் மாதம் 15ஆம் திகதி வரையும் ஆயிரத்துப் பத்து மோட்டார் வாகனங்களுக்கு அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளதாகச் செயலக உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அண்மைக் கால நடவடிக்கைகளால் பலர் இவற்றைப் பெறமுடியாத நிலையிலிருந்ததாகவும் தெரிவித்த அந்த அதிகாரி தற்போது பலர் அவற்றைப் பெற்று வருகின்றனர் எனவும் குறிப்பிட்டார்.

மோட்டார் வாகனங்களுக்கு அனுமதிப் பத்திரம் பெற விரும்பும் வாகனச் சொந்தக்காரர் யாழ் செயலகத்தில் உள்ள இறைவரிப் பகுதியில் தாம்செலுத்தவேண்டியபணம் பற்றிய அனுமதியைப் பெற்று யாழ். ஆஸ்பத்திரி வீதி இலங்கை வங்கிக் கிளையில் அதற்கான பணத்தைச் செலுத்தி அதன் பற்றுச் சீட்டை இறைவரிப்பகுதியில் செலுத்தவேண்டும்.

அதனையடுத்து அவருக்கு வாகன அனுமதிப் பத்திரம் வழங்கப்படுகிறது. இவ்வாறு அந்த அதிகாரி தெரிவித்தார்.

பருத்தித்துறை, தொண்டமனாறில்

## எரிபொருள் நிலையங்களை அமைக்க நடவடிக்கைகள்

(பருத்தித்துறை)

பருத்தித்துறையிலும், தொண்டமனாற்றிலும் வெகு விரைவில் எரிபொருள் விற்பனை நிலையங்கள் இயங்கத் தொடங்கவுள்ளதாக இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன உயரதிகாரியொருவர் ஈழநாதத்திற்குத் தெரிவித்தார்.

பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் பருத்தித்துறை தபால் நிலையத்திற்கு அருகாமையில் நடாத்தப்பட்டு வந்த பருத்தித்துறை ப. நோ. கூ. சங்க எரிபொருள்விற்பனை நிலையமும் தொண்டமனாற்றுச் சந்தியில் தனியாரொருவரினால் நடாத்தப்பட்டுவந்த எரிபொருள் விற்பனை நிலையமும் இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டதனால் இராணுவமுகாமிற்குள் அகப்பட்டு அவை இயங்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டன.

தற்போது இந்திய இராணுவம் வெளியேறியதை அடுத்து பருத்தித்துறை எரிபொருள் விற்பனைநிலையமும், தொண்டமனாறு எரிபொருள் விற்பனை நிலையமும் இயங்கக் கூடிய நிலையேற்பட்டுள்ளது. இதனை அடுத்து இவ்விரு எரிபொருள் விற்பனை நிலையங்களையும் இயங்கச் செய்வதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (25)

பட்ட பெருமளவு ஆயுதங்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றினர்.

விடுதலைப் புலிகளின் கட்டைபறிச்சான் பகுதிப் சந்தேகிக்கப்படுகிறது விடுதலைப் புலிகள் தொடர்ந்தும் ஆயுதங்களைக்கண்டெடுக்கும் பணியில் ஈடுபட்டு வருகிறார்கள். (28)

## யாழ்.மாவட்ட அபிவிருத்திச்சபை கணக்கு சரி செய்யப்பட்டது

(யாழ்ப்பாணம்)

மாற்றலாகிச் சென்ற உத்தியோகத்தர்கள் 1986ஆம் ஆண்டுக்கான, யாழ். மாவட்ட அபிவிருத்தி சபை கணக்குகள் அடங்கிய ஆவணங்களை ஒப்படைக்காத போதிலும் சரிசெய்யப்பட்டு, நான்கு வருடங்களுக்குப் பின் இவ்வருடம் முடித்து வைக்கப்பட்டுள்ளது.

கணக்காய்வு அத்தியட்சகரால் இப் பழைய கணக்குகள், அபிவிருத்திச் சபைக்குத் திருப்பி அனுப்பப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கதாகும். ஆனால் இக்கணக்குகளுக்கு இணைப்புகள் தயாரிக்கப்பட்டு, மறுபடியும் கணக்காய்வு அத்தியட்சகரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

புதிதாகப் பொறுப்பேற்ற உத்தியோகத்தர்கள் இணைப்புக் கணக்குகளைத் தயாரிப்பதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியதாக யாழ். செயலக அபிவிருத்தி சபை கணக்காளர் பகுதி அதிகாரி தெரிவிக்கிறார் (லோ)

### அன்னை நினைவாக கச்சேரியில் சிரமதானம்

(கல்லாறு)

மட்டக்களப்புக் கச்சேரி ஊழியர் நலன்புரிக்கழக உறுப்பினர்கள் அன்னை பூபதி நினைவாக எதிர்வரும் சனிக்கிழமை பிரமாண்டமான முறையில் கச்சேரிச் சுற்றாடலில் சிரமதானம் செய்யவுள்ளனர்.

அத்துடன் அன்றையதினம் ஒரு அஞ்சலி துண்டுப்பிரசுரத்தையும் மட்டக்களப்பு கச்சேரி ஊழியர் நலன்புரிக்கழகத்தின் சார்பாக வெளியிட்டு வைக்க கச்சேரி ஊழியர்கள் தீர்மானித்துள்ளனர்.

யாள உண்ணாவிரதம் இருக்க தீர்மானித்துள்ளனர்.

அன்னையின் நினைவு அஞ்சலி பிரசுரங்கள் தொழிற்சங்கங்கள், பாடசாலைகள், அலுவலகங்கள், வங்கி ஆகியவற்றினால் வெளியிடப்பட்டுள்ளது.

கடந்தவாரம் புதூர், வலையிறவு, திமிலைதீவு, வீச்சுக்கல்முனை ஆகிய கிராமங்கள் இணைந்து மாமாங்கப்பிள்ளையார் ஆலயம் வரை ஊர்வலமாக சென்று அடையாள உண்ணா விரதத்தில் கலந்து கொண்டனர்.

சின்ன உப்போடை மக்கள் ஊர்வலத்துடன் ஒரு நாள் அடையாள உண்ணா விரதம் அனுஷ்டித்தனர்.

கடந்தவாரம் அமிர்தகழி கொக்கட்டிச்சோலை, பழுகாமம், கன்னன்குடா, மாமாங்கம், கொம்மாதுறை அம்பி

## 20 லட்சம் ரூபா செலவில் தெங்கு நாற்றுமேடை

(யாழ்ப்பாணம்)

யாழ். மவட்டத்திற்கு தெங்கு நாற்றுகளை வழங்குவதற்கென இருபது லட்ச ரூபா செலவில் அச்சுவேலியில் ஒரு தெங்கு விதை நாற்று மேடை தயாரிக்கப்பட உள்ளது.

இந்நாற்று மேடையை அமைப்பதற்கென யாழ் செயலக திட்டமிடல் அபிவிருத்தி பிரிவு ஐந்து லட்சரூபா பணம் நன் கொடையாக வழங்குவதற்கு உத்தரவாதம் அளித்துள்ளதாக தெங்குப்பொருள் அபிவிருத்திச்சபைப் பணிப்பாளர் தெரிவிக்கிறார்.

கடந்த காலங்களில் தெங்கு அபிவிருத்திச் சபைக்கு ஏற்பட்ட நிதி நெருக்கடிகளால் இத்திட்டம் பின்போடப்பட்டு வந்ததாகவும் தற்போது செயலக திட்டமிடல் அபிவிருத்தி பிரிவின் நன்கொடை உத்தரவாதத்தைத் தொடர்ந்து இதனை ஆரம்பித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

(லோ)

அந்தந்த கிராம மக்களால் இணக்க சபைக்கான தலைவர், செயலாளர், உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இம் மாவட்டத்தில் பதினொரு இணக்க சபைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் மண்டபத்தில் இது சம்பந்தமான கூட்டம் இம்மாதம் 1ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெற்றது.

இக் கூட்டத்திற்கு, சுமார் முப்பத்து மூன்று கிராமங்களைச் சேர்ந்த உறுப்பினர்கள் சமூகம் தந்திருந்தனர்.

இணக்க சபைகளுக்கான வவுனியா மாவட்ட பொறுப்பாளர் திரு. மாரிமுத்து பொன்னம்பலம் தலைமையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் இணக்க சபைக்கான சட்டக் கோவைகள் பற்றி கலந்துரையாடலும், ஆய்வும் இடம்பெற்றது. (தி(

## தேசப் பிரமிகள் முகாம் பிடிபட்டது

(களுத்துறை)

தலைமறைவாகியுள்ள தேசப் பிரமி இயக்கத்தினர் முகாமொன்றைக் களுத்துறைக் காட்டில் பிடித்துள்ளதாக உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

சென்ற மாத இறுதியில் பொலிசாரும் பாதுகாப்புப் படையினரும் சேர்ந்து நடத்திய தேடுதல் வேட்டையின் போதே இம்முகாம் பிடிபட்டதாம்

இயக்கத்தினர் 10 தன் இயக்கத் துப்பாக்கிகளை வைத்திருந்தார்கள் என்றும், முகாமில் தங்கியிருந்த பதினைந்து இருபது பேரும் தப்பி ஓடிவிட்டார்கள் என்றும் பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தார்.

பெப்ரவரி நடுப்பகுதியில் கடத்திச் செல்லப்பட்ட இரு றிசேவ் பொலிஸாரையும் இந்த முகாமில்தான் வைத்திருந்தார்கள். இதில் ஒருவரை தேசப்பிரமிகள் ஏற்கனவே கொலை செய்துவிட்டார்கள் என்றும், முகாமைத் தாக்கியசமயம் மற்றப் பொலிஸாரை கைவிட்டு ஓடிவிட்டார்கள் என்றும் பொலிஸ் தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. இந்தப் பொலிஸ்காரர் பின்பு தேசப் பிரமிகள் முகாமின் நடவடிக்கை பற்றிய விபரங்களை பொலிஸாருக்கு தெரிவித்துள்ளார். முகாமின் அயலில் இருந்த கிராமங்களில் தேசப் பிரமிகள் கொள்ளைகள் செய்துள்ளதாகவும், பெருமளவிலான உணவுப் பண்டங்களைத் காம் முகாமிலிருந்து கைப்பற்றியுள்ளதாகவும் பொலிஸ் தரப்பில் சொல்லப்படுகிறது.

### யாழ்ப்பாணம் - கச்சேரி

(புனர்வாழ்வு, புனரமைப்புப் பிரிவு)

சேதமாக்கப்பட்ட கட்டிடங்கள் விற்பனைக்கான

## கேள்வி அறிவித்தல்

யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள சேதமுற்ற யாழ்ப்பாணம் பிரதம அஞ்சல் அலுவலக இருமாடிக் கட்டிடம் (நிலம் தவிர்ந்த கட்டிடம் சம்பந்தமான சகல பொருட்களும்) விற்பதற்கான கேள்விப் பத்திரப் படிவங்கள் யாழ்ப்பாணம் அரசாங்க அதிபரால் 1990 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 24ஆம் திகதி நண்பகல் 12-00 மணி வரை வழங்கப்படும்.

இக்கட்டிடத்தைப் பார்வையிட விரும்புகிறவர்கள் யாழ்ப்பாணம் புனர்வாழ்வு புனரமைப்புப் பகுதித் திட்டப் பணிப்பாளர் (தொழில் நுட்பம்) அவர்களுடன் தொடர்பு கொள்ளவும்.

அன்ரன் அல்பிரட்,
அரசாங்க அதிபர்
யாழ்ப்பாணம்.

செயலகம்,
யாழ்ப்பாணம்.
1990. 04. 04


## இறுதி அறிவித்தல்

வெளிவாரிப் பட்டப் பாடநெறிகளான கலைமாணி (B.A.) விஞ்ஞானமாணி (புள்ளிவிபரவியல்) (B.Sc.) தொடர விரும்பும் மாணவர்கள் 9.4.90க்கு முன்னர் தங்கள் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள். எக்காரணம் கொண்டும் பின்னர் அனுமதி வழங்கப்படமாட்டாது.

உதவிப்பதிவாளர்

# பட்டப்படிப்புகள் கல்லூரி

148|1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(R/83)


# மலையக நூலக அபிவிருத்திக்கு கண்டியில் கருத்தரங்கு

(கொழும்பு)

கண்டி தோட்டப் பிரதேசங்கட்கான கூட்டுச் செயலகமும், யாழ. அயோத்தி நூலக சேவையும் இணைந்து 'மலையக நூலக அபிவிருத்தி' கருத்தரங்கொன்றை கண்டி சத்தியோதய நிறுவனத்தில் ஏப்ரல் 6, 7, 8 ஆம் திகதி நடத்துகின்றது.

நூலகவியல் சம்பந்தமான இக் கருத்தரங்கை பேராதனை பல்கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவர் திரு. எஸ். தில்லைநாதன் தொடக்கி வைக்கிறார். நூலகவியல், ஆசிரியர் திரு. என். செல்வராஜா கருத்தரங்கை நெறிப்படுத்துவார்.

முதல்நாள் ''மலையகத்தின் நூலக சேவைகளின் இன்றைய நிலை'' - சாரல் நாடன், மலையகத்தின் வெளியீட்டு முயற்சிகள் நூல்களும், சஞ்சிகைகளும்- அந்தனிஜீவா, இலங்கையில் நூல்கள் கூபிதைப்படுத்தல் - திருமதி விமலாம்பிகை பாலசுந்தரம் ஆகியோர் கருத்துரை வழங்குவார்கள்.

இரண்டாம்நாள் ''நூலொலான்றின் பௌதீக அமைப்பும், நூல் கொள்வனவும்'' செல்வி ஸ்ரீ அருளானந்தம், நூற் பகுப்பாக்கமும், பட்டியலாக்கமும் கலாநிதி வே இ. பாக்கியநாதன், வாசகர் சேவையும் நூல் இரவல் வழங்கலும் - செல்வி ஸ்ரீ பொன்னையாப் பிள்ளை, நூலகமும் சமூகமும் - திரு. எஸ். எம். கமால்தீன் பொது நூலகமொன்றுக்கு பொருத்தமான தளபாடங்கள் திருமதி விமலாம்பிகை பாலசுந்தரம் கிராம நூலக கூட்டுறவின் அவசியம் - திரு. என். செல்வராஜா.

மலையகத்தைச் சேர்ந்த சமூக சேவை நிறுவனங்கள, இயக்கங்களிலிருந்து 32 பேர்கள் பங்கு பற்றுகிறார்கள். (27)


## தாதிப் பயிற்சி நெறி

பிரபல விரிவுரையாளர் குழுவினால் நடாத்தப்படும் பயிற்சி நெறி ஆரம்பம்

10th April 1990

- உள்ளூர் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கு உகந்தது
- பிரபல்ய தனியார் வைத்தியசாலையில் செய்முறைப் பயிற்சி
- விஷேட ஆங்கில (மருத்துவம்) வகுப்புகள்
- சிறந்த பாமஸி பயிற்சி, முதலுதவி பயிற்சி உட்பட

(பயிற்சி முடிவில் Diploma சான்றிதழ் வழங்கப்படும்)

உங்கள் பதிவுகட்கு

**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**

14, St. PETERS LANE,
HOSPITAL ROAD, JAFFNA.

(B / 597)


## பிரியாவிடை

(சுதுமலை)

'' பொது மக்களுக்கென்று சேவை செய்ய நியமிக்கப்பட்ட அரசாங்க ஊழியர்களாகிய நாங்கள் எம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்புக்களை சரிவர நிறைவேற்றுகின்றோமா என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும். நாட்டின் அசாதாரண நிலையால் ஸ்தபிதமடைந்த பல வேலைகளையும் எமது உறுதியான உள்ளத்துடன் நிறைவேற்ற நாம் அனைவரும் பாடுபடவேண்டும்''

இவ்வாறு யாழ். காணிப் பதிவகத்தில் காணிப்பதிவாளராகவிருந்து இளைப்பாறிச் செல்லும் திரு. கே. கயிலாயபதிக்கு அளிக்கப்பட்ட பிரிவுபாராட்டுவைபவத்திற்குதலைமை தாங்கி உரையாற்றும் போது யாழ். மேலதிக மாவட்ட காணிப்பதிவாளர் திரு ஜே. என். போர்மன் கூறினார்.

37 வருடங்களாக அரச உத்தியோகஸ்தராகப் பணியாற்றி நாட்டிற்கும் மக்களுக்கும் தனது சிறந்த சேவையை அளித்த திரு கைலாயபதியின் சேவை நலன்களைப்பாராட்டி சிரேஸ்டசட்டத்தரணி திரு. எஸ். கனகரத்தினம், நொத்தாரிஸ் திரு.எஸ். தர்மராஜா, காணிக்கந்தோர் எழுதுவினைஞர்கள் திரு எஸ். இராமகிருஷ்னன். திரு கே. நடராசா ஆகியோரும் உரையாற்றினார்கள் (19)

## அறிவித்தல்

### கரைச்சிப் பிரதேச சபை, கிளிநொச்சி.

கரைச்சிப் பிரதேச சபை எல்லைக்குள் வீடமைப்பு நகர சீர்திருத்த கட்டளைச் சட்டமும் அது தொடர்பான உப விதிகள் சுற்று நிருபங்கள் ஆகியன 16.06.1988 ஆம் திகதி தொடக்கம் அமுல்படுத்தப் பட்டுள்ளன.

எனவே அப்பிரதேச எல்லைக்குள் இருக்கும் முரசுமோட்டை உப பணிமனை, கிளிநொச்சி உப பணிமனை ஆகிய அலுவலக எல்லைக்குள் புதிய கட்டிடங்கள் அமைத்தல், பழைய கட்டிடங்களை திருத்தல், எல்லைச்சுவர்கள் அமைத்தல், புதிய பாதைகள் திறத்தல் என்பவற்றை செய்யுமிடத்து பிரதேச சபையின் முன் அங்கீகாரம் பெற்றுச் செய்தல் வேண்டும்.

இது சம்பந்தமான மேலதிக விபரங்களை இப் பிரதேச தலைமைப் பணிமனையில் (கிளிநொச்சி நகர மண்டபம்) அலுவலக நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

சு. வேலுப்பிள்ளை
விசேட ஆணையாளர்
கரைச்சிப் பிரதேச சபை,
கிளிநொச்சி. (B 702)

கரைச்சிப் பிரதேச சபை,
தலைமைப் பணிமனை,
கிளிநொச்சி. 5-4-1990


## அக்குபங்சர் வகுப்புகள்

பயிற்சி வகுப்புக்கள் யாவும் 1.5-90 இல் ஆரம்பமாகின்றன.

1. அக்குபங்சர் பயிற்சி. M Ac. F. (ஆங்கிலமொழிமூலம்)
   (சர்வதேச பல்கலைக் கழகப் பரீட்சை)
   போதனாசிரியர்: Dr. V. S. K. சிவலோகநாதன்
2. அக்குபங்சர் பயிற்சி M. Ac. A. (தமிழ்மொழி மூலம்)
   (இலங்கை அக்குபங்சர் சங்கப் பரீட்சை)
   போதனாசிரியர்: Dr. V. P சுந்தரராஜன்

பிரதம பரீட்சையாளர்: Dr. அன்ரன் ஜெயசூரியா அவர்கள் வைத்தியர்களும் வைத்திய மாணவர்களும் மேற்படி பரீட்சைக்கு தோற்றும் வகையில் வகுப்புகள் நடைபெறும் மட்டுப்படுத்தப்பட்ட மாணவர் தொகையாதலினால் பதிவுக்கு முந்துங்கள்.

விபரங்கட்கு:

### சாயி மெடிக்கல் அக்கடமி

இல. 10, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம். (R-85)



# சேக்கில் சென்ரர் - சங்கானை

கடந்த 6 ஆண்டு காலமாகப் பல்வேறு இன்னல்கள் இடையூறுகளுக்கும் மத்தியில் எமது அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் நண்பர்கள் முதலியோரின் ஆதரவால் வளர்ச்சி பெற்று சேவையால் உயர்ந்து நிற்கும் ஸ்தாபனம்.

# " சேக்கிள் சென்ரர் "

உள்ளக் கிளர்ச்சியுடன் 7ஆவது ஆண்டில் வெற்றிகரமாகக் காலடி எடுத்து வைத்துள்ளது. எனவே தொடர்ந்து உங்கள் அனைவரது அன்பையும், ஆதரவையும் வேண்டித் தனது சேவையைச் செவ்வனவே புரியக் காத்திருக்கிறது.

இந்த நன்நாளிலே நம் தமிழீழ மக்கள் மத்தியிலும் நல்லுறவும், நல்வாழ்வும் நாளும் பெருக நல்லிறையின் நற்கருணையை நாடி நிற்கிறது நம்

## "சேக்கிள் சென்ரர்"

வழமைபோல இம்முறையும் எமது ஸ்தாபனத்தில் ரூபா 100/- க்கு மேல் பொருட்கள் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளருக்கு இன்று தொடக்கம் 14-4-90 வரை 5% — 10% விசேட கழிவும் உண்டு. அத்துடன் 7-4-90 அன்று மட்டும் வீடியோப் பிரதிகள் ரூபா 5/-க்கு கொடுக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரியத் தருகின்றோம். அத்துடன் வீடியோப் படம் எடுப்பவர்கட்குத் தகுந்த சலுகைத் திட்டம் 9-4-90 தொடக்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதையும் தங்கள் கவனத்திற்குத் தருகின்றோம்.

- புதிய, பழைய வீடியோப் படப் பிரதிகளுக்கும்
- புதிய, பழைய பாடல்களை ஒலிப்பதிவு செய்யவும்
- சகலவிதமான பான்சி (Fancy) பாட்டா பாதணிகள், எவர்சில்வர் பொருட்கள், நூல்கள், றேந்தைகள், பாடசாலை உபகரணங்கள் அழகுசாதன ஆடம்பரப் பொருள்கள்

மற்றும்

- திருமண, பரதநாட்டிய அலங்கார நகைகள் யாவற்றிற்கும் தாங்கள் சங்கானையில் நாடவேண்டிய இடம்,

# "சேக்கிள் சென்ரர்"

பிரதான வீதி,
சங்கானை.



# CIRCLE CENTER

MAIN STREET.
CHANKANAI.

(B/592)

## சிந்தனைக்கு

நாமிருக்கும் நாடு நமதென்பதறிந்தோம் - இது
நமக்கேயுரிமை யாமென்பதறிந்தோம்

- பாரதியார்

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 07 - 04 - 90

# வீண் பிதற்றல்!

வாரம் ஒரு பத்திரிகையாளர் மாநாடு இப்பொழுது கொழும்பில் நடைபெறுகிறது. பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தின இந்த மாநாட்டை நடத்துகிறார். பாதுகாப்பு அதிகாரிகளும் இம் மாநாட்டில் கலந்து கொள்வர்.

கொழும்பிலுள்ள பத்திரிகைகளின் நிருபர்கள் மட்டுமல்லாது கொழும்பிலிருக்கும் வெளிநாட்டுச் செய்திச் சேவைகளையும் வெளிநாட்டு பத்திரிகைகளையும் சேர்ந்த பிரதிநிதிகளும் இம் மாநாட்டில் கலந்து கொள்வர்.

இலங்கையிலிருந்து இந்தியப்படை கடந்த மாதம் இருபத்திநான்காம் தேதி முற்றாக வெளியேறிய பின்னர் இந்த வாராந்தப் பத்திரிகையாளர் மாநாட்டில் இரண்டு மூன்று கேள்விகளே "கீறல் விழுந்த கிராமபோன்தட்டு மாதிரி" மீண்டும் மீண்டும் கேட்கப்படுகின்றன.

"புலிகள் ஆயுதங்களை ஒப்படைப்பார்களா? புலிகளிடமிருந்து ஆயுதங்களைக் களைவீர்களா?" என்பது ஒரு கேள்வி.

"விடுதலைப் புலிகள் வடக்கு கிழக்கு மாகாணங்களில் வரிவசூலிக்கிறார்கள். அப்படி அவர்கள் வரிவசூலிக்க முடியுமா? அரசாங்கம் இதைத்தடுத்து நிறுத்த முடியாதா?" என்பது மற்றொரு கேள்வி.

"அரசுக்கும் புலிகளுக்கும் நடைபெற்றுவரும் பேச்சுவார்த்தைகள் நீடிக்குமா. இருதரப்புக்குமிடையில் இன்று நிலவும் உறவு இன்னும் எவ்வளவு காலம் தொடரும்?"

இது போன்ற கேள்விகளும் இம் மாநாட்டில் கேட்கப்படுவதுண்டு.

ஆயுதங்களைக் கீழே போடுவது பற்றி நாம் ஏற்கனவே இப்பந்தியில் எழுதியிருக்கிறோம். விடுதலைப் புலிகளும் தலைவர் பிரபாகரனும் இதற்குச் சரியான பதில் சொல்லியிருக்கிறார்கள்.

"நித்திரை செய்பவனை எழுப்பலாம்; நித்திரை செய்பவனைப்போல் பாசாங்கு செய்பவனை எழுப்ப முடியாது" என்பது முதுமொழி.

ஆயுதங்கள் பற்றி என்னதான் விளக்கம் கொடுத்தாலும் அதை விளங்கிக் கொண்டாலும் விளங்காததுபோல் திருப்பித் திருப்பி ஆயுதங்களைக் களைவீர்களா என்று கேட்பது விளங்காத்தனமல்ல அசல் விஷமத்தனம்.

புலிகளிடமிருந்து ஆயுதங்களைக் களைய வேண்டும் என்று இன்று கேட்போர் இந்திய இராணுவம் தன்னுடன் கூட்டி வந்தவர்களுக்கும் அவர்கள் உருவாக்கிய 'கட்டாய இராணுவ' தமிழ்த் தேசிய இராணுவத்துக்கும் ஆயுதங்களுக்கு மேல் ஆயுதங்களாகக் கொடுத்துக் குவித்தபொழுது ஏன் வாய் மூடி மௌனிகளாக இருந்தனர்?

இப்பொழுது வடக்கு கிழக்கு மாகாண மக்களின்

# காஷ்மீர் பிரச்சினை தொடர்பாக
# பாகிஸ்தான் மனோநிலை மாறுதல்

காஷ்மீர் பற்றிய மனோ நிலைகளில் பாகிஸ்தானுக்கு உள்ளேயே குறிப்பிடத்தக்க மாற்றம் யுத்த வெறிஅகன்று, நிதானத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவது என்ற அணுகுமுறை இப்போது வற்புறுததப்பட்டு வருகிறது.

சமீபத்தில் தேசியசட்ட மன்றத்தில் ஒவ்வொரு பேச்சாளரும் காஷ்மீர் மக்களுக்கு ஆதரவளிக்க வேண்டிய தேவையை வலியுறுத்திய போதும்கூட, யுத்தம் பற்றி எச்சரித்தார்கள். பாகிஸ்தானின் காஷ்மீர் விவகார அமைச்சர் முகமது ஹனிப் கான் மக்களை இந்தியா பலத்தினால் ஒடுக்கிவிட முடியாது என்று இந்தியா ருடேயிடம் சொன்ன அதே நேரத்தில் "நாங்கள் போரை விரும்பவில்லை" என்றும் சொன்னார். பிரச்சினையை சர்வதேசப் பிரச்சினையாக மாற்றுவது தான் பாகிஸ்தானின் உத்தி, கடந்த மாதம் பிரான்ஸ் ஜனாதிபதி பிரான்சுவாஸ் மித்ரண்ட் பாகிஸ்தானுக்கு விஜயம் செய்தபோது அவருடன் காஷ்மீர் பிரச்சினை விவாதிக்கப்பட்டது.

டெஹ்ரிக் - இ - இஸ்டிக்லால் கட்சியின் தலைவர் - ஓய்வு பெற்ற ஏர் - மார்ஷல் அஸ்கர்கான் தன்னுடைய அறிக்கையில் நேரடியாகவே கூறுகிறார்: "காஷ்மீரை விடுவிக்க யுத்தத்தை அழைப்பவர்கள் காஷ்மீரின் நலனை விரும்புவர்கள் அல்ல"

'போக்' சட்டமன்றத்தின் எதிர்க்கட்சி தலைவர் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் முகமது ஹனித் கான் கூறினார். "ஆசாத் ஜம்மு - காஷ்மீரில் நாங்கள் புரட்சிகர தேசிய அரசை நிறுவி காஷ்மீர் விடுதலை இயக்கத்தைத் துரிதப் படுத்துவோம்." தங்களிடையே மாறுபட்ட கருத்துக்கள் கொண்டிருந்தாலும் ஜம்மு-காஷ்மீர் விடுதலை முன்னணித் தலைவர் அமானுல்லா கானும், 'போக்'கின் பாகிஸ்தான் மக்கள் கட்சித் தலைவர் சர்தார் முகமது இப்ராஹிமும் புரட்சிகர அரசு விஷயத்தில் ஒத்துப் போகிறார்கள்.

இப்போதும் கூட ஐக்கிய நாடுகள்சபை இயற்றும தீர்மானங்களின்படி கிடைக்கும் தீர்ப்பை பெரும்பாலான பாகிஸ்தானியர் விருப்பினாலும், தேக்கமடைந்து நிற்கும் சூழ்நிலை உடைக்கப்பட வேண்டும் என்ற எண்ணம் வலுப்பெற்று வருகிறது. சர்தார் கய்யூம் கூறுகிறார்: "காஷ்மீரின் இரண்டு பகுதி மக்களும் இணைந்து பேசி ஒரு வழி காண வேண்டும். அவர்கள் இந்தியாவிற்கோ, பாகிஸ் தானுக்கோ அல்லது தனித்தன்மை கொண்ட நாடாக இருப்பதற்கோ ஒப்புக் கொள்ள வேண்டும். அல்லது ஷேக் அப்துல்லா சொன்ன கூட்டாதிக்க உரிமையை ஒப்புக் கொள்ள வேண்டும் ஆனால் இது இப்போதிருக்கிற நிலையில் மக்களை சாந்தப்படுத்தி விடாது."

நன்றி: இந்தியா ருடே

# குடும்பப் பெண்கள் உண்ணாவிரதம்

(அம்பாறை மாவட்ட நிருபர்)

நாவிதன்வெளி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய வீதியில் அன்னை பூபதியின் 2 ஆவது ஆண்டு நினைவாக பலகுடும்பப் பெண்கள் உண்ணாவிரதம் இருக்கின்றனர்.

திருமதி மார்க்கண்டு சின்னத்தங்கம் தலைமையில் நடைபெறும் இவ்வுண்ணாவிரதம் சுழற்சியாக நடைபெறும்.

இதனை இப்பகுதி புலிகள் பொறுப்பாளர்களான திரு. ராஜ்குமார், முத்தலிபு ஆகியோர் ஒழுங்கு செய்துள்ளனர். தற்போது தினமும் பெருவாரியான பெண்களே இதில் பங்கெடுத்து வருகின்றனர். (48)

# வவுனியாவில் அடையாள உண்ணா விரதம்

(வவுனியா)

மட்டக்களப்பில் உண்ணா நோன்பிருந்து மரணித்த அன்னை பூபதியின் நினைவாக வவுனியா புதிய பஸ் நிலையத்திற்கருகில் சுழற்சி முறையிலான உண்ணா விரதம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

வவுனியா மாவட்ட சிற்றூரவைகளினால் ஒழுங்கு செய்யப்பட்ட மேற்படி

# தமிழ்மொழியையும், தமிழ்க்கலையையும் எத்தனை இடர்வந்தும் காத்து வருகிறோம்

## பண்ணும் பரதமும் நிகழ்ச்சியில் அமைச்சர் தேவராஜ் உரை

(கொழும்பு)

யாழ்ப்பாணம் தான் தமிழ் வளர்த்த பூமி, தமிழ் மக்களுக்கு ஒரு கேந்திர ஸ்தானம் அந்த மண் நாவலர் பிறந்த பூமி. மொழியும் கலையும் அங்கு வளர்கிறது. அந்த மண்ணை நாம் முன் மாதிரியாக கொள்ள வேண்டும் அதனால் ஏப்ரல் மாத இறுதியில் யாழ்ப்பாணம் போக இருக்கிறேன்.

இவ்வாறு இந்து சமய கலாசார தமிழ் அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் திரு.பி.பி. தேவராஜ்'பண்ணும்பரதமும்' நிகழ்ச்சிக்கு தலைமை வகிக்கு

வேலாயுதபிள்ளை அனைவரையும் வரவேற்றுப்பேசினார்.

நாதஸ்வர மேதை திரு. என். கே. பத்மநாதனின் நாதஸ்வர இசையுடன் விழா தொடங்கியது.

அமைச்சர் திரு. பி. பி தேவராஜ்மேலும் பேசுகையில்

நீண்ட இடைவெளிக்கு பின்னர் நாம் அனைவரும் ஒன்று கூடுகிறோம். பத்தாண்டுகளுக்கு பின் இன்னல் சூழ்ந்த நிலை மறைந்து தமிழ்பேசும் மக்களின் மனதில் நம்பிக்கை ஏற்படுகின்றது. சமாதானமும் அமைதியும் நிலவும் சூழக நிலை ஏற்படுகின்றது.

டை விட்டு குடிப்பெயர்ந்து போகும் அளவிற்கு அவர்கள் துன்பமும் துயரமும் அடைந்தார்கள்.

ஆனால் அவர்கள் மொழியையும் கலையையும் வளர்க்க தயங்கவில்லை. தமிழர்களை அழித்தாலும் அவர்கள் மொழியையும் கலையையும் அழிக்க முடியாது.

இந்து கலாசார அமைச்சு என்னிடம் ஒப்படைக்கப்பட்ட பொழுது நாட்டில் இன்னல் சூழ்ந்திருந்த நிலைமை பாரிய பொறுப்பு என் மீது சுமத்தப் பட்டது. இன்னல் சூழ்ந்திருக்கிறஇவ்வேளையில் மொழி

# உணவு முத்திரைகள் விநியோகம்

(காத்தான்குடி)

காத்தான்குடி உ. அ. அ. பிரிவில் அமைந்துள்ள புதிய காத்தான்குடி கிழக்குப் பகுதி மக்களுக்கான உணவு முத்திரைகள் விநியோகம் விடுதலைப் புலிகள் மேற்பார்வையுடன் வழங்கப்பட்டன.

ஜனாதிபதியின் விசேடபணிப்புக்கமைய இப்பகுதி கிராம சேவையாளர் ஜனாப் எம். ஏ. தாஹா செயல்படத் தவறியுள்ளார் என்றும், அதனால் இம்மாதம் முதலாம் திகதியன்று ஏனைய கிராம சேவையாளர்கள் உணவு முத்திரைகளை வைபவ ரீதியாக பொதுமக்களுக்கு கையளித்தது போன்று இவரால் கையளிக்க முடியவில்லை என்றும் இப்பகுதி விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி சிற்றூர்க் கிளைத்தலைவர் புகார் தெரிவித்திருந்தார்.

# கயரோக சங்கத்துக்கு மாடிக்கட்டிடம்

(பருத்தித்துறை)

இலங்கை தேசிய கயரோக நிவாரண சங்க வடமராட்சிக் கிளைக்கான மாடிக் கட்டிடமொன்று சுமார் மூன்று இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

அகதிகள் புனர்வாழ்வுக் கழகம், போறூட் நிறுவனம் ஆகியவற்றின் உதவியினாலேயே இம் மாடிக் கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. துன்னாலையில் தற்போது இச்சங்கத்திற்கான அலுவலகம் இயங்கி வரும் இடத்திற்கு அண்மையிலேயே இப்புதிய மாடிக் கட்டிடம் நிர்மாணிக்கப் பட்டு வருகின்றது. (25)

# ஊர்சுற்றி

## எழுதுவது

பாராளுமன்றத்தினுள்ளே எவரும் எதையும் பேசலாம். அவர்களுக்கு அதற்கு உரிமையிருக்கிறது பாதுகாப்புமிருக்கிறது.

சில சமயங்களில் ஒரு உறுப்பினர் மீது மற்றொரு உறுப்பினர் கண்டபடி குற்றச் சாட்டைச் சுமத்தினால் நீர் சபைக்குள்ளே இவற்றைக் கூறித் தப்பிக் கொள்ளலாம் சபைக்கு வெளியே வந்து சொல்லிப் பாரும் என்ன நடக்குமென்று"

இப்படிச் சவால் விடுவதுமுண்டு.

விடுதலைப் புலிகளுக்குப் அரசாங்கத்துக்குமிடையில் பேச்சு வார்த்தை நடைபெறுவதும் இருதரப்புக்குமிடையில் புரிந்துணர்வும் நட்புறவும் வளர்ந்து வருவதும் எதிர்க்கட்சியினருக்குப் பிடிக்கவில்லை.

நாட்டில் பிரச்சினைகள் இருந்தால்தானே சிலருக்கு அரசியல் பிழைப்பு நடத்த முடியும்.

நேற்று முன்தினம் சபையின ஒத்திவைப்புப் பிரேரணைமீது எதிர்க்கட்சியினர் கூச்சல்குழப்பம் போட்டனர். ஒத்திவைப்புப் பிரேரணை மீது கிளப்பப்படும் பிரச்சினைகளுக்கு அமைச்சர்கள் பதிலழிக்காமல் கூட விடலாம்.

இந்திய இராணுவம் வடக்குக்கிழக்கு மாககணங்களில் அட்டகாசமும் அட்டூழியமும் புரிந்த சமயத்திலும் கொழும்பில் இலங்கைப் பாராளுமன்றதின் கூட்டங்கள் நடைபெற்றுத் தானிருக்கின்றன.

அச்சமயத்தில் வடக்கு கிழக்கு நிலைபற்றிப் பேசுவதற்கு ஏன் எவரும்துணியவில்லை!

நேற்று முன்தினம் எதிர்க்கட்சியினருக்கு பாதுகாப்பு ராஜாங்கஅமைச்சர்ரஞ்சன் விஜேரத்தினா சூடாக ஒரு பதில் சொல்லியிருக்கிறார்.

"நீங்கள் இங்கே பாதுகாப்பாக இருந்து கொண்டு எதையும் பேசலாம். வடக்கே போய்ப் பார்த்து வாருங்களேன்: முடிந்தால் அங்கே போய்ச் சண்டை போட்டுச் பாருங்

குவித்தபொழுது ஏன் வாய் மூடி மௌனிகளாக இருந்தனர்?

இப்பொழுது வடக்கு கிழக்கு மாகாண மக்களின் பாதுகாப்புப் பற்றியும் சட்டம் ஒழுங்கு பற்றியும் அதிக அக்கறை காட்டும் பத்திரிகையாளர்களும் அரசியல்வாதிகளும் இந்திய இராணுவமும் அதற்கு முன் இலங்கை இராணுவமும் பொதுமக்களைச் சித்திரவதை செய்து கொன்று குவித்தபோது இம் மக்களின் பாதுகாப்புப் பற்றி ஏன் குரல் கொடுக்கவில்லை?

இந்திய இராணுவத்தின் பாதுகாப்புடன் அவர்களோடு வந்தவர்கள் கொலை, கொள்ளைகளில் ஈடுபட்டபோது மக்களின் பாதுகாப்புப் பற்றி ஏன் கவலைப்படவில்லை?

இந்தியப்படை கைது செய்த ஓர் இளைஞன் பற்றிய தகவலை அறிந்து கொள்வதற்கு இலங்கையின் உயர் நீதிமன்றத்தில் ஆள் ஆஜர்மனு தாக்கல் செய்ததைத் தொடர்ந்து இந்திய இராணுவத்தைச் சேர்ந்த பிரிகேடியர் மஜ்ஜித்சிங் மீது அழைப்பாணை பிறப்பிக்கப்பட்டது. இது பல தடவை பிறப்பிக்கப்பட்டது.

அந்த இந்திய இராணுவ அதிகாரி இலங்கையின் உயர்நீதிமன்றத்தையே தூசாக மதித்தார். நீதிமன்றத்தில் அவர் ஆஜராகவே இல்லை!

அப்பொழுதெல்லாம் வடக்கு கிழக்கு மாகாணங்களில் சட்டம் ஒழுங்கு பற்றி யாரும் கவலைப்படவில்லையே! ஏன்?

வடக்கு கிழக்கில் வரிவசூலிக்கிறார்கள் என்பது பற்றியும் இப்போது கேட்கிறார்கள்.

காட்டு வழியில் லொறிகளில் வந்த அத்தியாவசியப் பொருள் முதல் ஆடம்பரப் பொருள் வரை கொள்ளையிடப்பட்டபோதும்-

வழியில் பயணம் செய்துகொண்டிருந்தவர்களைக் கடத்திப் பணம் அறவிட்டபோதும்-

தனியார் வாகனங்களில் வரிவசூலித்த போதும்-

வடக்கு கிழக்கில் கடைகளிலும் வீடுகளிலும் இந்திய இராணுவத்தின் பாதுகாப்புடன் கொள்ளையடித்தபோதும்-

இவர்கள் ஏன் பேசாமலிருந்தார்கள்; என்ன செய்துகொண்டிருந்தார்கள்?

இந்திய இராணுவம் எமது மண்ணை விட்டு வெளியேறிக்கொண்டிருக்கும்போது விடுதலைப் புலிகள் மக்கள் மத்தியில் பெருந்தொகையான வரிகளை அறவிடுகின்றார்கள், அறவிடப் போகின்றார்கள் என்று புரளியைக் கிளப்பினார்கள். ஆனால் உண்மை நிலை இவ்வாறு இல்லை.

புலிகள் வரிவசூலிப்பது பற்றி இவர்களிடம் யாராவது முறையிட்டார்களா; அல்லது தென்னிலங்கையில் வரிவசூலித்தார்களா?

நாட்டில் அமைதி நீடிக்க வேண்டுமானால் விஷமத்தனமும் துவேஷத்தனமும் கொண்ட பத்திரிகையாளர்களும் அரசியல்வாதிகளும் வாயை மூடிக்கொண்டிருக்க வேண்டும்; இல்லையேல் மூடவைக்க வேண்டும்

---

வவுனியா மாவட்ட சிற்றூரவைகளினால் ஒழுங்கு செய்யப்பட்ட மேற்படி சுழற்சி முறையில் அமைந்த உண்ணா நோன்பு ஏப்ரல் மாதம் 19ஆம் திகதியான அன்னை மரணித்த நாள் வரை அனுஷ்டிக்கப்படும்.

கிடுகினால் வேயப்பட்ட பந்தலின் கீழ் பலர் உண்ணா நோன்பு அனுஷ்டித்ததை காணக் கூடியதாக இருந்தது. (தி)

---

ஜாங்க அமைச்சின் திரு.பி.பி. தேவராஜ்'பண்ணும்பரதமும்' நிகழ்ச்சிக்கு தலைமை வகித்து பேசுகையில் குறிப்பிட்டார்.

கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பு விவேகானந்தாசபை மண்டபத்தில் கொழும்புவிவேகானந்தாசபையும், இந்துசமய கலாசார தமிழ் அலுவல்கள் அமைச்சும் இணைந்து நடத்திய 'பண்ணும் பரதமும்' என்ற இசைநடன விழாவிற்கு சபைத்தலைவர் கலாநிதி கே.

---

ஏற்படுகின்றது. சமாதானமும் அமைதியும் நிலவும் சுமூக நிலை ஏற்படுகின்றது.

தமிழ் மொழியையும் தமிழ் கலையையும் அழிக்க முடியாது. எத்தனை இடர் வந்த போதிலும் அதனை நாம் கட்டிக் காத்து வளர்த்து வருகிறோம் இருள் சூழ்ந்த நிலையில் தமிழ் மக்கள் அனுபவித்த இன்னல்களை நாம் அறிவோம். வடக்கு கிழக்கு மக்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளானார்கள். நாட்

---

பட்டது. இன்னல் சூழ்ந்திருக்கிற இவ்வேளையில் மொழியையும் கலையையும் வளர்க்க வேண்டும் என்று எனது அமைச்சு செயற்பட்டது.

எனது அமைச்சு மாதம் ஒரு ஆய்வுரை என்ற திட்டத்தின் கீழ் கருததரங்குகள், ஆய்வுரைகள், கலந்துரையாடல்கள் போன்றவற்றை நடத்தியது தமிழறிஞர்களை அழைத்து கருத்துரை வழங்க ஏற்பாடு செய்தது.

தமிழ் மக்கள் செறிந்து வாழும் பகுதி வடக்கு கிழக்கு

(6ஆம் பக்கம் பார்க்க)

---

முடிந்தால் அங்கே போய்ச் சண்டை போட்டுச் பாருங்களேன்'' என்று ரஞ்சன் கூறியிருக்கிறார்.

இந்திய இராணுவத்தின் கடைசி அணி சென்ற மாதம் இருபத்திநான்காம் தேதி இலங்கையை விட்டுப் புறப்பட்டுச் சென்றதல்லவா?

அன்றுகாலை கொழும்பு கொள்ளுப்பிட்டிப்பகுதியில் திடீரென்று இலங்கைத் தேசியக் கொடியுடன் இந்தியத் தேசியக் கொடியும் பறந்து கொண்டிருந்ததைக் கண்டவர்கள் என்ன விசேஷம் என்று திகைத்தனர்.

இந்திய இராணுவம் போவதற்கு இப்படி ஒரு பிரியாவிடையா? அப்படி நடப்பதற்கு நியாயமில்லையே! இப்படிப் பலரும் யோசித்தார்கள்.

அன்று கொழும்பில் சத்யஜித்ரேயின் திரைப்படவிழா ஆரம்பமானது தான் இதற்குக் காரணம் என்பது பின்னர் தெரிந்தது.

களைக்கு எல்லையோ கட்டுப்பாடோ கிடையாதல்லவா?

---

# ஓய்வூதியம் பெறுவோர் செய்த தவறென்ன?

ஆசிரியர்,
ஈழநாதம்

ஓய்வூதியம் பெறுவோர் ஏதோ காரணத்துக்காக ஒடுக்கப்பட்ட ஓர் சமூகமாகக் கருதி அவர்களுக்கு மீளக்குடியமர்தல் நிவாரணமான ரூபா 2000/-மும் சுயதொழில் நிவாரணமான ரூபா 4000/-மும் பெற அருகதையற்றவர்களென வலி. மேற்கு உதவி அரசாங்க அதிபரும் குறிப்பாக அராலி வடக்கு கிராமசேவை அலுவலரும் ஓய்வூதியர்களுக்கு எந்தவிதமான நிவாரணமும் கிடையாதவாறு முற்றுப்புள்ளி வைத்தனர்.

எனவே அராலி வடக்கு ஓய்வூதியம் பெறும் நாம் ஓர் மனுவைத் தயாரித்து யாழ். அரச அதிபருக்கு மேல்முறையீடு செய்தோம். யாழ் செயலகம் உறுதியான ஓர் பதிலைத் தருவதற்கு பதிலாக மேற்கொண்டும் 32000 குடும்பங்களின் விபரத்துடன் அவர்களின் புனர்நிர்மாண நிதியைப் பெறுவதற்காக புனர்நிர்மாண அமைச்சுக்கனுப்பியுள்ளோம். அமைச்சு 'பச்சைக்கொடி' இன்னும் காட்டவில்லை. மேற்கொண்டு நிதி கிடைப்பது சந்தேகமாகவுள்ளதென தெரிவிக்கப்பட்டது. ஓய்வூதியம் பெறுவோர் இந் நிவாரணம் கிடைக்குமென எதிர்பார்ப்பது அர்த்தமற்றது எனக் கூறப்பட்டது.

எனவே ஓய்வூதியம் பெறுவோர் இந்நிவாரணங்களுக்கு உரித்துடையவர்களா என்பதையறிய சென்ற 26ஆந் திகதி திங்கட்கிழமை கொழும்பிலுள்ள புனர்வாழ்வு புனரமைப்பு இலாகா உயர் அதிகாரிகளைப் பேட்டி கண்டு, ஓய்வூதியம் பெறுவோரின் நிவாரணம் சம்பந்தமான கோரிக்கையை முன்வைத்தோம். தமிழ் ஓய்வூதியர்களின் நிலையை கேட்டறிந்த அவ்வதிகாரி மீளமர்வு நிவாரணம் பெற கட்டுப்பாடில்லையெனவும் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு கொடுபடாதது கவலைக்குரியதென்றும் எங்கோ தவறு நடந்துவிட்டதெனவும் கூறி புனர்வாழ்வு புனர்நிர்மாண அமைச்சு செயலாளருடன் தொடர்பு கொண்டு 27ஆந் திகதி காலை 9-30 மணிக்கு அவரைச் சந்திக்குமாறும் வசதி செய்து தந்தார்.

எனவே 27 செவ்வாய் காலை புனர்வாழ்வு புனர் அமைச்சு செயலாளரைக் கண்டு ஓய்வூதியம் பெறுவோர் கிட்டத்தட்ட 122 பேருக்கு இந்நிவாரணங்கள் கொடுக்கப்படவில்லையெனவும் 32,000 குடும்பங்களுக்கு நிவாரணத்துக்காக உங்கள் பச்சைக்கொடியை எதிர்பார்த்திருப்பதாகவும் யாழ். செயலகம் தெரிவித்ததையும் தெரிவித்தோம். ஓய்வூதியம் பெறுவோர் கைச்சாத்திட்ட மனுவும் எம்மால் சமர்ப்பிக்கப்பட்டது.

அமைச்சின் செயலாளர் மேலதிக செயலாளரையும் வரவழைத்து ஓய்வூதியம் பெறுவோர் என்ற காரணத்துக்காக நிவாரணம் மறுக்கப்படக்கூடாதென்றும் இந்நிவாரணம் பெற யாருக்கும்

## மக்கள் மடல்

உரிமையிருக்கெனக் கூறி நிவாரணம் பெறாத ஓய்வூதியம் பெறுவோருக்கு கொடுப்பனவுக்கான நடவடிக்கை எடுக்கப்படுமென உறுதி கூறினார். அதேசமயம் ஓர் கேள்வி எழுப்பப்பட்டது. நீங்கள் ஓய்வூதியகாரரென்ற காரணத்துக்காக நிவாரணம் கிடைக்கவில்லை. அப்படியானால் யாழ். அரச அதிபரினாலனுப்பப்பட்ட 32,000 குடும்பங்களும் அதைத் தொடர்ந்து அனுப்பப்பட்ட பட்டியலிலுள்ள பல குடும்பங்களும் இந்நிவாரணம் பெறாததேன் என்பதே.

இவர்கள் கிராமசேவையாளர்களின் அன்புக்கும் பண பாசத்துக்கும் அப்பாற்பட்ட பாமர மக்களாக இருக்கலாமென சிலேடையாக அவர்கள் கவனத்துக்குக் கூறி விடை பெறுகின்றேன்.

**எஸ். ஆர். அருமைநாயகம்**
அராலி வடக்கு.

---

## அங்கிகாரம் வழங்கப்பட்டது

(வவுனியா)

க. பொ. த. உயர்தரவகுப்புகளை நடாத்துவதற்கான உத்தியோக பூர்வமான அங்கீகாரம் நெளுக்குளம் கலைமகள் மகாவித்தியாலயத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி பாடசாலையில் கடந்த வருடத்திலிருந்து. இவ் வகுப்புகள் நடாத்தப்பட்டுவந்தாலும் சில தினங்களுக்கு முன்பே வடக்கு கிழக்கு மாகாண அமைச்சினாலும், கல்வி அமைச்சினாலும் இவற்றுக்குரிய உத்தியோக பூர்வமான அங்கீகாரம் வழங்கப்பட்டது. (தி)

---

## கலைமகள் வித்தியாலய நூற்றாண்டுவிழா

(வவுனியா)

நெளுக்குளம் கலைமகள் மகாவித்தியாலயத்தில் சிறப்பாக அதன் நூற்றாண்டு விழா நடை பெற உள்ளது.

இதற்கான உப குழு தெரிவு அண்மையில் நடைபெற்றது என்றும் இந் நூற்றாண்டு விழா எதிர் வரும் யூன் மாதம் மூன்றுநாள் விழாவாக நடைபெறும் என்றும் இப் பாடசாலையின் அதிபர் திரு. க. சற்குணசிங்கம் தெரிவித்தார்.

---

## நகைகள் மீளளிப்பு

(கல்லாறு)

31-03-89 வரை பணம் செலுத்தி நகைகளை மீட்கத் தவறியவர்களின் நகைகளை களுவாஞ்சிக்குடி மக்கள் வங்கி கிளையில் மட்டக்களப்பு மக்கள் வங்கி காசு கொடுப்பனவு கிளையில் (மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்திற்கு முன்னால் உள்ளது.) மீளளிப்பதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக முகாமையாளர் திரு. ம. குழந்தைவேல் ஈழநாதம் நிருபரிடம் தெரிவித்தார்.

ஈழநாதம்

# பரீட்சை பெறுபேறு வருமுன் புதியவகுப்பு ஆரம்பிக்கக் கூடாது

## சுவரொட்டிகளையும் தவிர்க்கவேண்டும் தனியார் கல்வி ஒன்றியம் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

பரீட்சைப் பெறுபேறுகளுக்கு முன்னதாக வகுப்புக்களை ஆரம்பிப்பதால் தன்னுடைய கற்கை நெறி குறித்துத திட்டமான முடிவு எடுக்காத நிலையிலேயே மாணவர்கள் வகுப்புக்களில்கலந்துகொள்ளவேண்டிய நிலைக்குத்தள்ளப்படுகின்றனர்.

இவ்வாறு தனியார் கல்வி நிறுவன இயக்குனர் பிரத்தியேக வகுப்புக்களுக்குரிய ஆசிரியர்களுக்கு விடுத்துள்ள வேண்டுகோளில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: பரீட்சைப் பெறுபேறுகள் வெளியான பின்னர் கற்கை நெறியை மாற்றவேண்டிய நிலையும் மாணவர்களுக்கு ஏற்படுகிறது.

சில மாணவர்கள் உயர்தர வகுப்புக்களில்கலந்துகொண்ட பின்னர் பெறுபேறுகள் திருப்தியற்றதால் சாதாரண தர வகுப்பிற்கே திரும்பும் நிலையும் ஏற்படுகிறது.

க. பொ. த. சாதாரணப் பரீட்சை முடிவுற்றவுடனேயே உயர் தர வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படுவதால் அம்மாணவர்களுக்கு ஓய்வு இல்லாத நிலையும் ஏற்படுகிறது.

க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான பாடத்திட்டங்களின் கர்பித்தலுக்குரிய நேரத்திலேயேஇந்த வகுப்புக்களும் ஆரம்பிக்கப்படவுள்ளன. இதனால் 90, 91 பிரிவு உயர்தர மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள். இதனைக் கருத்திற்கொண்டு க. பொ. த உயர்தர 92ஆம் வருடத்தின் பரீட்சைப் பெறுபேறுகள் வெளிவந்த பின்னரேயே ஆரம்பிக்க வேண்டும்.

### சுவரொட்டிகள் வேண்டாம்

தனியார் கல்வி நிறுவனங்களின் சுவரொட்டிகளும் தற்போதைய காலப்பகுதியில் தவிர்க்கப்பட வேண்டியது ஆயிற்று அவர்கள் விடுதலைப் போராளிகளின் வரலாறுகளையும், விடுதலைக் கீதங்களையும் சித்தரிக்கத் தொடங்கியுள்ளனர். இவ்வேளையில் அவற்றிற்கு இடையூறாக சுவரொட்டிகளை ஒட்டக் கூடாது. நகரினை அசிங்கம்படுத்தும் வகையில் சுவரொட்டிகளைப் பயன்படுத்துதல் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# தமிழ் கட்சிகளும் சேர்ந்து அரசை எதிர்க்க வேண்டுமாம்

## சிறிமா அம்மையார் கூறுகிறார்

(கொழும்பு)

மனித உரிமை மீறல்களை எதிர்த்தும் விலைவாசி உயர்வை எதிர்த்தும் பெரும் போராட்டம் நடத்துவதற்குத் தமிழ்க் கட்சிகள் உட்பட சகலரும் ஒன்றிணைய வேண்டும் என்பது ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவியும் எதிர்க் கட்சித் தலைவியான திருமதி சிறிமா பண்டாரநாயக்கா நேற்று முன்தினம் மாலை புதிய நகர மண்டபத்தில் நடைபெற்ற எதிர்க் கட்சிகளின் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியும் ஐக்கிய சோஷலிச முன்னணியும் இணைந்து நடாத்திய இக்கூட்டத்தில் திருமதி சிறிமாவின் மகளும் அமரர் விஜய குமாரணத்துங்காவின் மனைவியுமான சந்திரிகா குமாரணத்துங்காவும் கலந்து கொண்டார்.

திருமதி சிறிமா பண்டாரநாயக்கா இக்கூட்டத்தில் மேலும் பேசுகையில் நாட்டில் அமைதி நிலவுவதாக அரசாங்கம் பிரசாரம் செய்வதாலும் உண்மையில் நாட்டில் அமைதி நிலவவில்லை என்றார்.

பன்முக முதலீடுகளை வரவேற்பதாகவும் உல்லாசப்பயணிகள் இலங்கைக்கு அச்சமின்றி வரலாமென்றும் அரசு பிரசாரம் செய்தலிலும் வீதிகளில் சடலங்கள் இன்னமும் கிடக்கத்தான் செய்கின்றது என்றும் கூறிய திருமதி சிறிமா ரிச்சார்ட் டீ. சூஸாவைக் கொலை செய்தது யார் என்றும் கேட்டார்.

விடுதலைப்புலிகளுக்கு அரசு அதிகாரம் கொடுத்துவிட்டதாகவும் திருமதி சிறிமா குற்றம் சாட்டினார்.

# நெல்லியடி மக்கள் வங்கியில் இன்றும் நாளையும் நிவாரணம்

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள கிராம சேவகர்கள் பகுதிகளில் இன்று 7ஆம் திகதி சனிக்கிழமையும், நாளை 8ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் நெல்லியடி மக்கள் வங்கி கிளையில் நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

7ஆம் திகதி சனிக்கிழமை- கரவெட்டி கிழக்கு, அல்வாய் தெற்கு, துன்னாலை தெற்கு.

8ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கரவெட்டி மேற்கு, கரவெட்டி வடக்கு, துன்னாலை மேற்கு, கரணவாய்.

## ரயிலைப் பிடிக்க மாலையில் ஒரு பஸ்

மட்டக்களப்பிலிருந்து கொழும்புக்கு இரவு ரயிலில் பயணம் செய்வதற்கு வசதியாக அக்கரைப்பற்றிலிருந்து இம் மாதம் முதலாம் திகதியிலிருந்து மாலை 5-30 மணிக்கு ஒருபஸ் சேவையிலீடுபடுகிறது

இதனால் அக்கரைப்பற்று, கல்முனைப்பகுதி மக்கள் முதல் நாள் வந்து மட்டக்களப்பில் தங்கியிருக்காது அன்றைய தினமே ரயில் பயணத்தை தொடர முடிகிறது.

இதேவேளை கல்முனை அக்கரைப்பற்று பாதையில் போதிய பஸ்கள் இல்லாததால் மூன்று மணிக்கு ஒரு முறையாக பஸ்கள் சேவையிலீடுபடுகின்றன.

இதனால் கல்முனை, அக்கரைப்பற்றுக்கு இடைப்பட்ட பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்

# முப்பத்தைந்து நாட்களில் 10,000 உறுதிகள் பதிவு!

(யாழ்ப்பாணம்)

கடந்த முப்பத்தைந்து நாட்களில் யாழ். காணிப் பதிவு அலுவலகத்தில் பத்தாயிரம் காணி உறுதிகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக யாழ். மேலதிக மாவட்ட பதிவாளர் திரு. ஜே.என். போர்மன் ஈழநாதத்துக்கு தெரிவித்தார்.

இதுவரை பதினான்காயிரம் காணி உறுதிகள் பதிவுக்கு வந்துள்ளதாகத் தெரிவித்த அவர் காணிப்பதிவு அலுவலக ஊழியர்கள் துரிதமாக செயற்பட்டு இவற்றை பொது மக்களிடம் சேர்ப்பிக்க உதவுகிறார்கள் எனவும் சொன்னார்.

இதேசமயம் பிறப்பு,இறப்பு பதிவு வேலைகளிலும் பெருமளவு முடிந்துவிட்டதாகவும் அவர் சொன்னார்.

1954 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பிறந்தவர்களுக்கான பத்திரங்கள் சிறுதொகையே கொழும்பிலிருந்து வந்துள்ளன. மேலும் கொழும்புக்கு நேரில் சென்று அவற்றைக் கொண்டு வந்து பொது மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுத்துள்ளார்.

பிறப்பு இறப்பு பதிவு அலுவலகத்தில் இடம் பெறும் மோசடிகளைத் தடுக்க அடிக்கடி இந்த அலுவலகத்துக்கும் மேலதிகப் பதிவாளர் திரு. போர்மன் வந்து அங்கு நடைபெறும் வேலைகளைக் கவனித்து வருகிறார்.

# ஆஸ்பத்திரி வீதி வங்கியில் ஞாயிறும் திங்களும் நிவாரணம்

ஆஸ்பத்திரி வீதி இலங்கை வங்கி கிளையில் வைத்து 18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவு கிராம சேவகர்கள் பகுதிக்கு நாலாயிரம் நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

நாவற்குழி, சாவகச்சேரிநகர், கைதடி, நுணாவில், தனங்கிளப்பு, நுணாவில் மேற்கு, கைதடி நுணாவில், மட்டுவில் தெற்கு, மட்டுவில் வடக்கு என்பன.

9ஆம் திகதி திங்கட்கிழமை எமது கிளையினால் வழங்கப் பட்டு இதுவரையில் ஆயிரம்

# புதிய கல்விப்பணிப்பாளருக்கு முஸ்லிம்கள் பாராட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தின் புதிய கல்விப்பணிப்பாளராக மீண்டும் நியமனமான திரு.இ.சுந்தரலிங்கத்தை யாழ் முஸ்லிம் வட்டாரத்தைச் சேர்ந்த பல சமூக நிறுவனங்களும், பள்ளிவாசல் பரிபாலன சபைகளும் பாராட்டியுள்ளன.

யாழ் சின்னப்பள்ளிவாசல், பெரியகடை ஜும்மா பள்ளிவாசல், வெள்ளக்கடற்கரைப் பள்ளிவாசல், கமால் பள்ளிவாசல், புதிய முகிதீன் பள்ளிவாசல், புதுப்பள்ளி வாசல், பெரிய மூகிதீன் பள்ளிவாசல், சிவலை பள்ளிவாசல், சின்ன கடை கோட்டைப் பள்ளிவாசல் ஆகியவற்றின் பரிபாலன சபைகளும் இவ்வாறு பாராட்டியுள்ளன.

இதேபோல யாழ். முஸ்லிம் அபிவிருத்திச் சங்கம். யாழ். முஸ்லிம் இணக்கசபை, யாழ். முஸ்லிம் சமூக அபிவிருத்திச் சங்கம், யாழ். முஸ்லிம் கல்விக் குழு. அல்பதாஹ சனசமூக நிலையம், யாழ். முஸ்லிம் விளையாட்டு கழகம், இலெனின் ஹாட் விளையாட்டுக் கழகம் யாழ். ஒஸ்மானியா கல்லூரி பழைய மாணவர் சங்கம், முஸ்லிம் போக்குவரத்து ஒன்றியம், அகில இலங்கை முஸ்லிம் லீக் யாழ். கிளை என்பனவும் பாராட்டியுள்ளன.

திரு. சுந்தரலிங்கம் இனமத வேறுபாடுகளின்றி பணிபுரியவர் முன்னர் இங்கு கல்விப் பணிப்பாளராக இருந்து போது முஸ்லிம்களின் கல்வி மேம்பாட்டுக்கு உழைத்தவர் எனவும் அந்த பாராட்டு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இலகு கடன் முறையில் பஜாஜ்!

(கொழும்பு)

ரூபா 35,000த்தை முதலீடு செய்து பஜாஜ் ஆட்டோ ஒன்றை வாங்கும் வாய்ப்பு கிட்டியுள்ளது. இத்திட்டத்தின் பிரகாரம் மிகுதிப் பணத்தை வங்கி, கடனாக வழங்கும். வங்கி வழங்கிய பணத்தை நான்கு வருடங்களில் தவணை முறையில் செலுத்தலாமாம். வாகன ஓட்டுநர் அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள் எவரும் இச் சலுகையைப் பெற உரித்தானவர். இத்திட்டம் கொழும்பில் சமீபத்தில் அமுல் படுத்தப்பட்டுள்ளது,

## விடுதலைப் புலிகள் 15-ம் தேதிவெளிவரும்

(யாழ்ப்பாணம்)

'விடுதலைப்புலிகள்' என்ற பத்திரிகை இம் மாதம் பதினைந்தாம் தேதி வெளியிடப் படவிருக்கிறது.

இயக்கத்தினதும் கட்சியினதும் குறிக்கோள்கள், வேலைத்திட்டங்கள் ஆகியவற்றைக் கொண்ட புரட்சிகர ஏடாக இது வெளிவருமென்று புலிகளின் வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

## சிட்னியில் இறுதிக்கிரியை நடந்தேறியது

(யாழ்ப்பாணம்)

ஆஸ்திரேலியாவின் தலைநகரான சிட்னியில் கடந்த இரண்டாம் திகதி திங்கட்கிழமை காலை காலமான இலங்கையின் முன்னாள் உதவிப்பரீட்சை ஆணையாளர் திரு. வே. சதாசிவத்தின் ஈமச் சடங்குகள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை சிட்னியில் நடைபெற்றது.

பரீட்சைத்திணைக்களத்தில் பரீட்சை அத்தியட்சகராகவும் உதவிப் பரீட்சை ஆணையாளராகவும் நீண்ட காலம் கடமையாற்றிய திரு. சதாசிவம் பின்னர் கல்விவெளியீட்டுத் திணைக்கழகத்தில் பிரதி ஆணையாளராகவும் பணியாற்றினார்.

யாழ் வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வி கற்றுப் பின்னர் மட்டக்களப்பில் சுவாமி விபுலானந்தர் தொடங்கிய இராமகிருஷ்ண மிஷன் சிவானந்த வித்தியாலயத்தின் முதல் மாணவர்களில் ஒருவராகச் சேர்ந்து பின்னர் சிதம்பரம் அண்ணாமலை

## திருமலையில்...

(1 ஆம்பக்கத் தொடர்ச்சி)

மக்கள் முன்னணி உறுப்பினர்

## யாழ். மாவட்ட....

## கச்சேரிகளில்....

(1ஆம் பக்க தொடர்ச்சி)

தியோகஸ்தர்கள் பதவி வெற்றிடம் ஏற்பட்டுள்ள நிலைமை கடந்த பல காலங்களாக இருந்துவரும் பொழுதிலும் கவனிக்கப்படாது விடப்பட்டுள்ளது.

இதேபோல யாழ். செயலக தமிழ்த் தட்டெழுத்தாளர் பதவியிலும் நான்கு பேர் சேவையில் ஈடுபட்டுள்ளனர். ஆனால் ஒரு நாளுக்கு இவர்களுக்கு குறைந்தது 40 கடிதங்கள்தானும் அடிப்பதற்கு வழங்கப்படுவதில்லை. ஆனால் யாழ். மாவட்டத்தில் உள்ள உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் தமிழ் தட்டெழுத்தாளர்கள் ஐந்து பிரிவுகளிலேயே உள்ளனர். மிகுதி ஒன்பது பிரிவுகளிலும் தமிழ் தட்டெழுத்தாளர் பதவி வெற்றிடமாக உள்ளது.

குறிப்பிட்ட சில தட்டெழுத்தாளர்கள் தொடர்ந்து பதினைந்து வருடங்களாகச் சேவையாற்றி வருவதாகவும் அறியக்கூடியதாக உள்ளது. இவர்கள் மேலதிகாரிகளின் சலுகைகளைத் தகுந்த முறையில் காலாகாலம் பயன்படுத்தி வருகின்றனர்.

ஆகவே உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் தேங்கிக் கிடக்கும் கடிதங்கள் தட்டச்சு செய்வதற்கும் எவரும் இல்லாத நிலை இருந்து வருகின்றது. (லோ)

## யாழ்....,

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வரத்துச்சபை அதிகாரியிடம் கேட்டபோது வடபிராந்திய போக்குவரத்துச்சபை இதற்கு பஸ்ஸை சேவையிலீடுபடுத்தினால், கிழக்கு பிராந்திய சபையும் சேவையிலீடுபடுத்தும் எனக் கூறியுள்ளார்.

## 30 பழுதடைந்த...

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

தேவை எமக்கு இருக்குமிடத்தில் 160 பஸ்கள் மட்டும் இப்பொழுது சேவையில் ஈடுபட்டிருப்பதாகவும் இதிலும் முப்பது பஸ்கள் கழிக்கப்பட வேண்டியவை என கூறினார்.

மேலும் மட்டக்களப்பு பகுதிக்கு இரவுநேர பஸ்சேவை செய்வதுபற்றி குறிப்பிட்ட அவர் பஸ்தட்டுப்பாடு நீங்கும் வரை மட்டக்களப்புக்கு பஸ் ஓடுவது சாத்தியமாகாது என்றும் கூறினார்.

அத்துடன் இலங்கைப் போக்குவரத்து சபையால் 220 என்ஜின் தொகுதிகள் அசோக் லேலண்ட் கம்பனியிடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்டுள்ளது எனவும் இதில் நான்கு என்ஜின் தொகுதிபட்டும் வடபிராந்திய போக்குவரத்து சபைக்கு ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கூறினார்

## இரவு யாழ்-..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெண்மணியும் தன் சமுத்தைத் (தாலியை) இறுக்கிப் பிடிக்கவே அந் நபர் பாய்ந்து ஓடிவிட்டாராம். இந்நபர் ஏற்கனவே சங்கிலி இழுத்த விடயமும் பின்புதான் தெரியவந்ததாம்.

சுமார் அரைமணி நேரம் இந்த ரயில் இதனால் தாமதமடைந்தது.

பொதுவாக ரயில்பிரயாணத்தில் நகை அணிவது பற்றி ரயில்வேப் பாதுகாப்பு அதிகாரிகள் எச்சரிக்கை தெரிவித்தும் சில பெண்கள் இவ்வாறு நடந்து கொள்வதால் எல்லோரும் பல கஷ்டங்களை ரயில் பயணத்தின்போது அனுபவிக்கின்றனர் என ரயில்வே பகுதி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 07-ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது

...ப்படவுள்ளது.

அதன் விபரங்கள் வருமாறு நாவற்காடு, விடத்தற்பளை, வரணி இயற்றாலை, விடத்தற்பளை, தவசிக்குளம், கொடிகாமம், கச்சாய், மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி வடக்கு, மறவன்புலோ,

## தமிழ்

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதில யாழ்ப்பாணம் ஒரு முக்கிய கேந்திரஸ்தானமாகும் அங்கு ஒரு வார காலம் இருக்கப்போகிறேன். சேதமடைந்த வலையங்கள், கட்டிடங்கள் ஆகியவற்றை பார்ப்பதுடன் தமிழ்வளர்ச்சிபற்றிபல்கலைக் கழகத்திற்கு சென்று அங்கு அறிஞர்களை சந்திதது கலந்துரையாட உள்ளேன். மொழியையும் கலையையும் வளர்ப்பதில் எனக்கு உங்களின் உதவி வேவை.

நாடெங்கிலும் உள்ள கலை வளர்ச்சிக்கும் இயக்கங்களும் சங்கங்களும் எம்முடன் இணைந்து செயற்பட முன்வரவேண்டும். நான் சேர்ந்து பணியாற்றி பல சாதனைகளை செய்ய முடியும் என்றார்.

யாழ் பல்கலைக்கழக மாணவர்களின் 'மனித புராணம்' என்ற இசைச்சித்திரம், வீணை இசை, நாட்டிய நாடகம், பின்னல் கோலாட்டம், பண்ணிசை போன்ற நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. (27)

## நிறை ...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யாளர் மாநாட்டிலும் இது குறித்து விளக்கம் அளிக்கப்பட்டது. ஆனால் இதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

சில தினங்களுக்கு முன்னர் மானிப்பாயில் சுகாதாரத்துக்கு ஒவ்வாத பிஸ்கட் வகைகள் ஒரு பேக்கரியில் கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

பட்டு இதுவரையில் ஆயிரம் ரூபா, நாலாயிரம் ரூபா பெற்றுக் கொள்ளாதவர்களுக்கு கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளது.

# நால்வர் மீது நடவடிக்கை?

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் காமினி திஸநாயகா, சமரவீர வன்னியாராச்சி, எட்டியாந்தோட்டை முன்னாள் எம்.பி. வின்சென்ட் பெரேரா, கே. எம். பி. சிறில் ஆகிய நால்வரும் தங்கள் பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளை ராஜினாமாச் செய்யும்படி ஜனாதிபதியினால் கேட்கப்பட்டிருப்பதாக அரசியல் வட்டாரங்களிலிருந்து அறியப்படுகிறது. இவர்கள் மீது விரைவில் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படக் கூடுமென்றும் அரசியல் வட்டாரங்களிலிருந்து அறியப்படுகின்றது.

## புதுவருட....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வைப்பு செய்பவர்களுக்கு வழமையான வட்டி வீதத்திலும் பார்க்க கூடிய வட்டி வீதம் ஒரு வருடத்துக்கு வழங்கப்பட உள்ளது.

அத்துடன் ஒரு லட்சமும் அதற்கு மேலும் வைப்பில் இருப்பவர்களுக்கு வழமையான வட்டி வீதத்திலும் பார்க்க ஒரு வருடத்திற்கு அதிவிசேட வட்டி வழங்கப்படும் என யாழ்ப்பாணம் வர்த்தக வங்கி கிளை முகாமையாளர் செ. இராகவன் தெரிவிக்கிறார்.

அவர் மேலும் வங்கியின் எதிர்கால செயற்பாடுகள் பற்றி குறிப்பிடும்போது தற்போது வங்கி முன்பிலும் பார்க்க சுறுசுறுப்பாக இயங்கி வருவதாலும் வேலைகளை கூடிய விரைவில் செய்வதற்கும் வர்த்தக வங்கி யாழ். கிளையை கம்பியூட்டர் மயப்படுத்த தீர்மானித்துள்ளதாகவும் அவர் கூறினார். (லோ)

## யாழ். மாவட்ட....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தென்மராட்சி மேற்கு ஆகிய பகுதி மக்கள் அழைக்கப்படுகின்றனர். 16ஆம் திகதி ஒன்பது மணிக்கு கொடிகாம பிரதேச சபைக் காரியாலயம் தென்மராட்சி கிழக்கு, மீசாலைவடக்கு பகுதி மக்கள் அழைக்கப்படுகின்றனர். வேலணை 11ஆம் திகதி மண்டைதீவு மகாவித்தியாலயத்திற்கு காலை ஒன்பது மணியளவில் அப்பகுதி மக்கள் அழைக்கப்படுகின்றனர்.

பருத்தித்துறை 9ஆம் திகதியும் 10ஆம் திகதியும் அப்பகுதி மக்கள் அழைக்கப்படுகின்றனர்.

தெல்லிப்பழை 8ஆம் திகதி அப்பகுதி உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு அழைக்கப்படுகின்றனர். (லோ)

## அன்று.......

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

டில் தோன்றவேண்டுமா?

இந்தியப்படை இருந்தால் வடக்கு கிழக்கில் மட்டுமல்ல தெற்கிலும் பீதி நிலவியது. இனிமேலும் இவை இடம் பெறாமல் இருக்க நாம் சகோதரத்துவமாக வாழ வேண்டும்.

## மகேந்திரராசா

( 1-ஆம் பக்கத் தொடர்ச்சி)

பட்டது. இச்சந்திப்பின்போது ஜனாதிபதி பிரேமதாசாவையும், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பிரமுகர்கள் சந்திப்பதாக இருந்தது.

அதேவேளை இச்சந்திப்பு ஒரு வார காலதாமதத்தின் பின் நடைபெறலாம் எனத் தெரிய வருகின்றது.

## ஒரே நாளில்....

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

இவை பரவலாக கிளிநொச்சி, யாழ்ப்பாணம், மன்னார் புத்தூர், எருக்கலம்பிட்டி, எழுதுமட்டுவாள், கொக்குவிலில் நடந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும். (லோ)

மக்கள் முன்னணி உறுப்பினர் முகமது, ஞானகணேஷ், ஆதி. திருமலை மாணவ உறுப்பினர் செல்வகணேஷ், திருமலை அன்னையர் முன்னணி உறுப்பினர் திலகவதி ஆகியோர் கலந்துகொண்டனர். இக்கூட்டத்திற்கு 2000 க்குமேற்பட்ட மக்கள் வந்திருந்தனர்.

## கலன் கசிப்புக்கு

(1-ஆம் பக்கத்தொடர்ச்சி)

கப்பட்டு, பொதுமக்கள் முன்னிலையில் கசிப்பு ஊற்றி எரிக்கப்பட்டது.

கசிப்பு விற்றவர்கள் எச்சரிக்கை செய்யப்பட்டதோடு, ஒரு கலன் கசிப்புச்கு ஆயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது.

இதேபோல வேறு இடங்களில் கசிப்பு விற்றால் இவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

... சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைச்கழகத்தில் பி. ஏ., எம். லிட். பட்டங்கள் பெற்றார். இலங்கைப் பல்கலைக்கழகத்தில் டிப்ளோமாப் பட்டமும் தொடர்ந்து இலங்கை நிர்வாக சேவை அதிகாரியாகவும் விளங்கினார்

# தியாகசிலம் புனரமைப்பு

(வட்டுக்கோட்டை)

மானிப்பாய் பகுதியில் அமைந்துள்ள தியாகசீலம் இந்திய இராணுவத்தினரால் சிதைக்கப்பட்டுக் காடாகக் காட்சி தந்தது. இப்போது புனரமைப்பு வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. பொதுமக்கள், சிறார்கள் வருடப் பிறப்பு மற்றும் பாடசாலை விடுமுறைக்கு விளையாட்டரங்கை எதிர்பார்த்துள்ளனர். (47)


தனியார் கல்விநிறுவன ஒன்றியம்

யாழ் மாவட்டம்

### விசேட அறிவித்தல்

# க.பொ.த. உயர்தரம் 92 பிரிவு

நடைபெற்று முடிந்த க. பொ. த. சாதாரணதரப் பரீட்சையிற் தோன்றிய மாணவர்களுக்கான க. பொ. த. உயர்தர வகுப்புகளை எக்காரணங் கொண்டும் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகு முன்னர் ஆரம்பிக்க வேண்டாமென சகல தனியார் கல்வி நிறுவன இயக்குனர்களையும் பிரத்தியேக வகுப்புக்குரிய ஆசிரியர்களையும் வேண்டிக்கொள்கின்றோம்.

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

யாழ் மாவட்டம்.

(B707)